# தொழிலுக்கு ஒருவர்




இரா. இளங்குமரனார்

# தொழிலுக்கு ஒருவர்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006.

# நூல் விளக்கம்

| | |
|---|---|
| நூற்பெயர் | தொழிலுக்கு ஒருவர் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார். |
| உரிமை | ஆசிரியருக்கு |
| முதலாம்பதிப்பு | மே - 2016 |
| தாள் | 13. 7 வெள்ளைத் தாள். |
| அளவு | 1/8 |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 52 |
| படிகள் | 1000 |
| விலை | உருவா 40/- |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7 இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006.<br>அலைப்பேசி 94427 60616 |

*****

# கடப்பாட்டுப் படைப்பு

'ஊருக்கு ஒருவர்' என்னும் நூல் எழுதும் போதே, 'தொழிலுக்கு ஒருவர்' என்னும் நூல் எழுதும் ஆர்வம் கிளைத்தது. ஆனால், அடிப்படைக் கருத்துகளை ஒரு பக்க அளவில் குறிப்பாக எழுதி வைத்தேன்; அவ்வளவில் நின்றது.

'ஊருக்கு ஒருவர்' நல்ல வரவேற்புப் பெற்றது. பல பதிப்புகளும் கண்டது. மீள்பதிப்பும் வர வேண்டியுள்ளது. அந்நிலையில், 'தொழிலுக்கு ஒருவர்' என்பதும் வெளிப்படுகின்றது.

**'தொழிலுக்கு ஒருவர்'** என்பது, இயல்முறையான ஒப்புரவு வாழ்வு பற்றியது. ஒப்புரவு வாழ்வு உருவாகத் தடைகள் இரண்டே' ஒன்று: **யான்**; இரண்டு: **எனது**. ஆதலால்,

**"யான் எனது என்னும் செருக்கு"**

எனப்பட்டது. **அச்செருக்கில்லாராம் ஒப்புரவாளர், இயற்கை இயங்கியல் உணர்ந்து வாழும் இறை நிலையர்.**

அத்தகையர் வாழ்வும் தொழிலும், ஆட்சியும் அமையின், இறையாளுமை (இறையாண்மை) என்பதாகவே இருக்கும். இது, **கற்பனைப்** படைப்பன்று!

**கடப்பாட்டுப்** படைப்பு!

கருவியைப் படைப்பார், வேறு; கருவியைப் பயன் படுத்துவார், வேறு!

படைப்பாளர் எல்லை, உள்ளம்! பயன்படுத்துவார் எல்லை, உலகம்!

ஊருக்கு ஒருவர், பாட்டியும் பேரனும் உரையாடல்!

'தொழிலுக்கு ஒருவர்' தாத்தாவும் அதே பேரனும் உரையாடல்!

பொதுநிலை போற்றல் இரண்டற்கும் ஒருநிலையே.

இந்நூல் தமிழ் கூறு நல்லுலகில் உலாக் கொள்ள உதவுபவர் நெய்வேலிப் பேரன்பர் தாமோதரனார் தம் பெற்றோர் பெயரில் பாலம்மாள் குமாரசாமி அறக்கட்டளை அமைத்தவர். தவச்சாலைப் புரவலர், என்

நூல்கள், சில அறக்கட்டளை வழி வெளிவர முன்னும் உதவிநின்றவர் அவர். அவர்க்கும் அவர் இணையர் முதல் குடும்பத்தவர் அனைவர்க்கும் நன்றியுடையேன்.

என் எழுத்துப் பணிக்குப் பேருதவியாம் வகையில் உழுவல் அன்புடனும் உரிமை நண்புடனும் கைம்மாறு கருதாப் பெருந்தகைமையொடு தொடர்ந்து பல்கால் மெய்ப்புப் பார்த்து உதவும் பெருமகனார் முனைவர் திரு.பி. தமிழகனார் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தினர்க்கும் உள்ளார்ந்த நன்றியுடையேன்.

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# தொழிலுக்கு ஒருவர்

'வள்ளலார் ஒப்புரவுத் தொழிற்பண்ணை' என்னும் பெயர், கண்டான். 'ஏன் வெளியே நிற்கிறாய்! உள்ளே வா' என்று அழைப்பது போல் இருந்தது பலகை.

உள்ளே புகுந்தான் நல்லதம்பி!

ஓரிளைஞன் வந்து வணக்கமிட்டான். "நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும் எதற்குப் பார்க்க வேண்டும்" என்பதை, 'வரவேற்பறைக்கு வந்து பதியுங்கள். வரவேற்பறையில் வழிகாட்டி உள்ளார். அவர் உங்களுக்கு வேண்டுவ செய்வார்" என்று சொல்லி, வரவேற்பறைக்கு அழைத்துச் சென்றான்.

நல்லதம்பி வரவேற்பு அறைக்குள் சென்றான். அங்கிருந்த முதியவர், "தம்பி வாங்க! இந்தப் பேரேட்டில் தங்கள் பெயர், முகவரி, இங்கு வந்த நோக்கம் ஆகியவற்றைப் பதிவு செய்யுங்கள்" என்றார்.

நல்லதம்பி தன்னைப் பற்றிய குறிப்பு வந்த நோக்கம் ஆகியவற்றைப் பதிவு செய்தான்.

வழிகாட்டி ஓர் இருக்கையைக் காட்டி, "இங்கே இருங்கள்" இன்னும் அரைமணிப் பொழுதில் நீங்கள் பார்க்க விரும்பிய 'தாத்தா' வருவார். இங்கே உள்ளவர்க்கெல்லாம் 'பெரியவர்' என்பதே பெயர். வேறு முறைப் பெயரோ, இயற்பெயரோ எவரும் குறிப்பதில்லை" என்றார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது 'மோர்' வந்தது. நல்லதம்பி பருகினான்.

நீங்கள் விரும்பும் புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம், என்று 'புத்தக நிலைப் பேழையைக் காட்டினார் வரவேற்பாளர்.

நல்லதம்பி நூற்பேழையில் கைவைத்தான்.

உன்னை நீ உயர்த்த வேண்டுமா? என்னும் நூல் வந்தது.

"உன்னை நீ உயர்த்த விரும்பினால் அடுத்த பாலினரைக் காதலிக்கு முன்னர் உன்னை நீ காதலி! அதுவே முதல் பாடம்" என்று தொடங்கியது.

"என்னை நான் காதலிப்பது எப்படி என எண்ணுகிறாயா?"

உன் எண்ணக்குறை அது!

உன்னை நீ காதலித்துக் கொண்டே இருக்கிறாய்! ஆயினும் நான் 'என்னைக் காதலிப்பது எப்படி?'' என வினவுகிறாய். அதற்கு மேலும், அது 'தன்னலம்' அல்லவா என்றும் நினைக்கிறாய்! உனக்கு நீயே கொள்ளும் முரண் இது!

வீட்டில் இருக்கும் போது உன் உடை என்ன?

நீ வெளியேறும் போது - ஒரு திருமணத்திற்கு விழாவுக்குப் போகும்போது - உடுத்தும் உடை என்ன?

தலையை முகத்தை உடையை எத்தனை முறை சீர் செய்து கொண்டு புறப்படுகிறாய்! இது, **'உன்னைக் காதலிப்பது'** இல்லையா?

உன்னை நீ விரும்பி உடலை - உள்ளத்தை - பொருளைப் பேணிக் கொள்ளாவிட்டால், நீ பிறர்க்குப் பாரம் ஆகி விடுவாய் அல்லவா! நீ உன்னைக் காதலித்துப் பேணாவிட்டால் பிறர்க்குப் பாரம் மட்டுமன்று! உனக்கும் தான் எத்தனை சஞ்சலம் - துயர் - பழி' ஆதலால், குடி தாங்கியாக - தலைமையனாக - இருக்க விரும்புவான், முதற்கண் தன்னை நன்றாகப் பேணிக் காத்துக் கொள்ளவேண்டும்! தன் உடல் உள - வாழ்வு - தொழில் நிலைகளுக்குத் தாழ்வு வருமாறு உன்னைக் கெடுத்துக் கொள்ளவும் கூடாது. தன்னைக் கெடுப்பான். தன் குடும்பத்தை - உற்றார் உறவை - அன்பு நண்பைக் கெடுத்தவனும் ஆவான்! "என்னை நான் கெடுக்கிறேனா!" என்றும் எண்ணுவாய்! "தன்னைக் கெடுத்துக் கொண்டே என்னைக் கெடுக்கிறேனா! என்று வினவுவதும் முரண் இல்லையா?'' நூலை முழுவதும் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் கிளர்ந்தது. ஆனால், பெரியவர் தலை தெரிந்தது. நல்லதம்பி நூலை எடுத்த இடத்தில் வைத்து விட்டு எழுந்து வணங்கினான்.

நான் **நல்லதம்பி** என்றான்.

ஓ! நீ **திருப்பூரான்** இல்லையா! **துளசி** மகன் வழிப் பேரன் தானே!

உன் தறித்தொழில் நன்றாக நடக்கிறதா? வீட்டில் எல்லாரும் நலமாக இருக்கிறார்களா? என்று வினாக்களின் மேல் வினாக்களைத் தொடுத்தார் பெரியவர்! உரிய விடைகளைத் தந்தான் நல்லதம்பி!

(பாட்டியைப் பார்த்துப் பேசியதைச் சொல்லியிருப்பார்! பெரியவர் நன்றாக நினைவில் வைத்துள்ளார். எப்படியும் வயது தொண்ணூறு இருக்கும். அறுபது வயதினர் போல் கம்பு இல்லாமல் கண்ணாடி இல்லாமல் காதுப் பொறி மாட்டாமல் கடமை புரிகிறார்! **"உன்னை**

**நீ உயர்த்த வேண்டுமா?"** என்னும் நூலின் விளக்கம் இவர்தாம் போலும் என நினைத்துக் கொண்டான்!)

தாத்தா, பாட்டியோடு உரையாடினேன். அப்பொழுதே, "நான் இந்த ஊரைப் பார்த்துக் கொள்கிறேன். தாத்தா பக்கத்து ஊரைப் பார்த்துக் கொள்கிறார்" என்றார்! இவ்வூரை நீங்கள் தொழிற் பண்ணையாக ஆக்கி வருவதைத் தான் சொல்லி இருக்கிறார் என நினைக்கிறேன். பாட்டி ஊருக்கு ஒருவர்: நீங்கள் **தொழிலுக்கு ஒருவர்** எனச் செயலாற்றி உள்ளீர்கள்! என்றான்!

உன்னைப் போலும் இளைஞர்கள் வாலியர்கள் ஈடுபட்டுச் செய்ய வேண்டிய கடமைகள்! பொறுப்புகள்! அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது முதியவர்கள் கடமை என்பது தொல்காப்பியர் ஆணை! பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குடும்பமும் நாடும் உலகும் சிறப்புறக் காட்டிய வழி அது. அதனை நாடு போற்றி இருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். புதிது புதிது என்று போலி மோகம் கொண்டு நம்மவர் காட்டிய நலத்திட்டங்களை நாட்டுமக்கள் கருதவில்லை. அதன்பயன் தான் தனி மாந்தர் பண்பாட்டுக் கேடு, குடும்பக்கேடு, தொழில் கேடு! மொத்தத்தில் நாட்டாட்சியரும், அயன்மைப்பட்ட அறிவாளர்களும் பொதுநலக் கேடராய், தந்நல வஞ்சராய் மாறிவிட்டார்கள். அந்த நிலையில் நாட்டை நினைக்காமல் முடியாது என்னும் ஆதங்கத்தில் தான் ஈடுபட்டு எங்களால் இயன்ற செயல்களைச் செய்கிறோம். அதன் அடிப்படைதான் "தன்னைத் தான் காதலனாதல்" (உன்னை நீ உயர்த்த வேண்டுமா?) என்னும் நூல்! அது தம்மைத்தாம் காதலர் ஆதல் என விரியும் வகையில் தானே, நம்குடும்ப அமைப்பே அமைந்துள்ளது என்றார்.

**'எப்படி தாத்தா'** என்றான் நல்லதம்பி!

நான் திருமணம் செய்யும் வரை என்மேல் எனக்கிருந்த பற்று யார் மேலும் இல்லை. பின்னர் என்பற்று என் மனைவி - ஆம் - "உன் பாட்டியும் நன்றாக இருக்கவேண்டும்" என்னும் பற்றாக வளர்ந்தது. எங்களுக்கு மக்கள் பிறந்த பின்னர் அவர்கள் நலத்திற்காக வாழவேண்டும் என்னும் இயல்பு எழும்பியது. பிறகு கொண்டவர், கொடுத்தவர், அண்டியவர், அடுத்தவர், அன்பர் நண்பர் என விரிந்தது. அப்படித்தான், நீரில் உண்டாகிய சிறிய அலைவட்டம் பெருவட்டமாக விரிதல் போல் விரிவாயிற்று! வயது ஏற ஏற எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்றும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க

வேண்டும் என்றும், அன்புநிலை, அருள்நிலையாக விரிந்தது. அதுவும் விரிந்து தொண்டாகிய இறைநிலையாக ஓங்கியது. பெயர்களை (நாமாவளி) 108, 1008 என்றோ ஆயிரம், இலக்கம், கோடி என்றோ சொல்லிப் பயனில்லை! நம்மால் முடிந்த நான்கு பேர் வாழ்வுக்கு ஏதாவது செய்தல் வேண்டும். அதுவே நம் பிறவிக்கும் பிறர் ஆக்கத்திற்கும் நலம் செய்வது என்னும் தெளிவு பிறந்தது.

**'தெளிவு பிறந்தாலும் வாய்ப்பு வேண்டுமே தாத்தா'**

நீ கேட்பது சரிதான். எங்கள் ஊர் சிற்றூர். அதில் எவரையும் எதிர்பாராமல் உழைப்பால் உயரத் திட்டமிட்டது திட்டமிட்ட படியே நிறைந்தது. இது பெருந்திட்டம்! நாங்கள் எண்ணியும் பார்க்க முடியாதது. அதற்கு ஒரு வாய்ப்பு, தானே வந்தது.

**எப்படி தாத்தா?**

இப்பொழுது பார்க்கிறாயா, தொழில் பண்ணை இதன் பரப்பளவு 110 குறுக்கம். கால் குறுக்கம், அரைக் குறுக்கம், ஒரு குறுக்கம் எனத் துண்டுபட்டுக் கிடந்த இடமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், ஓர் உழைப்பாளர்; அதே நேரம் சுரண்டல்காரர்; அதே பொழுதில் அவர் ஒரு கருமி! அவருக்குச் சொந்தமாக இருந்தது இந்த 110 குறுக்கம். அவர்க்குச் சொந்தக்காரர்கள் அவர் பணத்தையும், நிலத்தையும் ஈவிரக்கமில்லாமல் பறிக்க நினைத்தனர். அவர் உழைப்பாலும், கருமித்தனத்தாலும் தேடிய நிலத்தை எளிதில் விடுவாரா? அவர்க்கு உறவுமேல் வெறுப்பு உண்டாயது. அவர் மனைவியும் படுத்தபடுக்கையாய் வாத (வளி) நோய்க்கு ஆட்பட்டார்! கருமியாக இருந்தாலும் கடைசி நேரத்தில் அவர்க்கு ஒரு நல்லெண்ணம் உண்டாயிற்று. "ஊர் நிலம் ஊர்க்கே ஆகட்டும்" என்று எண்ணினார். அப்பொழுது நான் ஊர்த்தொண்டு செய்வது அவர்க்கு ஓர் ஆறுதலாக இருந்தது.

அதனால், "ஊர் நிலமாக இருந்ததுதான் இந்த நூற்றுப்பத்துக் குறுக்கமும், என் தந்தையார் வழியாக எனக்கு வந்தது 10 குறுக்கம். மற்ற நூறு குறுக்கமும் துண்டு துக்காணியாக யான் வாங்கிச் சேர்த்ததுதான். இந்நிலத்தை நான் பார்க்கும் அளவில் இல்லை. என் மனைவியும் படுத்த படுக்கையிலே கிடக்கிறாள். எங்கள் காலம் வரை நீங்கள் எங்களை நன்றாகப் பேணுவீர்கள் என்று நம்புகிறேன். அதனால் இந்த இடத்தையெல்லாம் நீங்கள் ஆக்கமான வழியில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; எனக்கு எந்தத் தொகையும்

வேண்டியதில்லை. என் கையிருப்புப் பணத்திலேயே பொதுவுக்குப் பதிவு செய்து தந்து விடுகிறேன். மேலுள்ள தொகையையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னார். கையோடே பெட்டியையும் திறவுகோலையும் தந்தார்!

"என்ன தாத்தா! கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிரித்துக் கொண்டும் தரும் என்பார்கள்! இந்தத் தெய்வம் கூரையைப் பிரிக்காமலே தந்துள்ளது! பழம் நழுவிப் பாலில் விழுந்து, அது கையிலே விழுந்தது என்னும் பழமொழிக்குத் தான் ஒப்பாகச் சொல்லலாம்".

தம்பி, நான் பெட்டியையும் திறவு கோலையும் வாங்காமல், "வைத்து இருங்கள்! நான் ஊர்க்குப் போய் வருகிறேன். எந்தச் செயலையும் நான்கு பேர் காண - நான்கு பேர் அறியச் - செய்வது நல்லது இல்லையா?" என்றேன்.

"ஏன்? ஊரையடித்த கருமி சொத்து என்று நினைக்கிறீர்களா? அதனால் தயங்குகிறீர்கள்! நீங்கள் 'அறத்தால் தேடு' என்னும் திருக்குறளை வாழ்வாகக் கொண்டவர்கள் அல்லவா என்றார்! இல்லை! இல்லை! அதற்கு வேறு காரணம் உண்டு! அதை நாளை நான் சொல்கிறேன்" என்று ஊர்க்குப் போய்விட்டேன்.

ஊரானால் பாட்டி இருக்கிறாரே! ஊர் அவை இருக்கிறதே; (வள்ளுவர் தோன்றாத் துணையாய்) வள்ளுவம் தோன்று துணையாய் - உள்ளனவே! எல்லாம் எண்ண வேண்டும் அல்லவோ!

(பெரியவர் பெரியவர் தாம்! வந்தது வாய்ப்பு எனக் கையை நீட்டாமல் வர, யார் இருப்பார்? ஏதோ ஆழ்ந்து அகன்ற நோக்கில் தான் அப்படிச் செய்திருப்பார்! என்று எண்ணி) பின் என்ன செய்தீர்கள் தாத்தா!

ஊருக்குப் போய், பாட்டியிடம் பேசினேன்! வியந்து போனார்! "அவரா இப்படி மாறினார். 'தடுக்கி விழுந்த இடத்தில் தங்கக் குடம் கிடைத்தால் கூடக் கிடைக்கலாம்! உங்களுக்கு - உங்கள் உண்மை உழைப்புக்குக் - **கரும்பையாவாகவே** மாறியிருக்கிறார், **கருப்பையா?** இனி ஊர்க்குக் கருப்பையா இல்லை! **கரும்பையா!** கருமி இல்லை! கண்கண்ட வள்ளல்! களஞ்சியம், கருவூலம் என்பனவும் தாமே முன்வந்து தரமாட்டா! வள்ளல் கருப்பையா போன்றவர்கள் தாம் பிறரை வாழவைக்க வாய்த்த நடமாடும்

களஞ்சியங்கள்! கருவூலங்கள்!" என்றார்' கம்பைப் பிடித்து நடப்பவர் கம்பை எடுக்காமலே நடந்தார் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

**அவர்க்குத் தந்த செய்தி தேனும் அமிழ்தும், கோலும் குடையுமாக இருந்ததால் பிறந்த எழுச்சி தாத்தா!**

அவர்தாம் தொழில் பண்ணைத் திட்டத்தை முன்னமே முன்னெடுத்தவர்; திட்டமும் தந்தவர். ஊரவையைக் கூட்டினோம். பெரியவர் கருப்பையா சொல்லிய சொல்லை அவையில் முன் வைத்தேன். அவையினர் நம்பவே இல்லை! ஆனால் நான் சொல்வதால் நம்பாமல் இருக்க முடியவில்லை! ஊரவை மூத்த உறுப்பினர் **பெரியண்ணன்** எழுந்தார். நம் பெரியவர் நல்லவே எண்ணி நல்லவே செய்வார். "பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின், அருமை உடைய செயல்" என்பது வள்ளுவம். நம் பெரியவர் அதைச் செய்திருக்கிறார். நாளைக்கு நாம் 'குல தெய்வ வழிபாட்டுக்குப் போவது போல' மாலை வெற்றிலை பாக்கு பழம் ஆகியவற்றுடன் பெண்கள் குரவை இட இளவட்டங்கள் கும்மியுடன் போய் அவர்க்கும் அவர் மனைவிக்கும் சிறப்புச் செய்து ஒரு பாராட்டு விழாவே நடத்திவிடுவோம்.

ஊர்க்கு உதவும் கருப்பையா போன்றவர்களும் குலதெய்வங்கள் தாமே! ஒரு மனிதர் தம் தவற்றை உணர்ந்து திருந்திவிட்டால், அவர் புதுப்பிறப்புப் பிறந்துவிட்டார் என்பது பொருள். இதைத்தான் "சித்தம் திருந்தல், செத்துப் பிறத்தல்" என நூலாகப் பாடினார். நம் வழிகாட்டிகளுள் ஒருவராகப் போற்றி வரும் திரு.வி.க. "பெரியண்ணன் பெரியண்ணன் தாம்! அவர் சொன்னதே சரி! அப்படியே நாளைக்கு நாம் ஊரோடு போவோம்" என்று ஊரவையார் கூறினர்.

**சரியான திட்டம்! சரியான முடிபு! மேல் நடந்தது என்ன தாத்தா?**

மறுநாள் காலை தாரை தப்பட்டை முழங்க ஊரே திரண்டு இந்த முரம்புக்கு வந்தது. என்ன வியப்பு! வாதத்தால் தாக்கப்பட்ட அன்னம்மாளும் கட்டிலை விட்டு எழும்பி வாயிலுக்கு வந்துவிட்டார்.

**"வள்ளல் கரும்பையா அன்னம்மாள் வாழ்க!**
**வாழ்க! வாழ்க."**

என மாலை சூட்டினோம்! வயிரவிழாப் போலப் பாராட்டினோம்! சரிதானே! கருப்பு வயிரம் கரியாக இருந்தது. வயிரம் ஆகும்போது,

மாந்தன் வயிரம் ஆக முடியாதா? கருப்பையா பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். திறவுகோலைப் பெரியண்ணன் பெற ஏற்பாடு செய்தோம்! அதற்குள்ளே பணத்தாளும் பணமுமாக ஐம்பதாயிரத்துக்கு மேல் இருந்தது! முரம்பு என்னும் பெயர்கொண்டது கரும்பூர் ஆயது. வள்ளலார் ஒப்புரவுத் தொழிற்பண்ணைப் பதிவு, கால்கோள் என்பவை நடந்தன. மூலமுதலாம் இடமும் தொகையும் எங்களுக்கு வரவும், நாங்கள் காலநேரம் பார்க்காமல் தொழிலில் இறங்கினோம். எங்கள் தனித் தேவைக்கென்றும் பொதுத் தேவைக்கென்றும் இருந்த தொகையையும் போட்டோம்! கூலி என்பது இல்லாமையால் யார்யார் என்ன வேலை செய்யமுடியுமோ அவற்றைச் செய்து பண்ணையை உருவாக்கினோம்.

**வள்ளல் கருப்பையா அன்னம்மாளுக்கு என்ன செய்தீர்கள் தாத்தா?**

அவர்கள் தனியே இருத்தல் ஆகாது என்று எண்ணி நம் ஊரிலே உள்ள '**முதியோர் இல்லத்தில்** தங்கவும், உரிய மருத்துவம் பெறவும் ஏற்பாடு செய்தோம்! அவர்களுக்கு நல்ல நிறைவாயிற்று. இதுவரை எவரோடும் ஒட்டாமல் "பூதம் காத்த புதையலாக இருந்தோம். இப்பொழுது தான் எங்கள் வாழ்வு,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாய் தருநிழலாய் நிழல்கனிந்த கனியாய் ஆகியுள்ளது அறிந்து மகிழ்கிறோம்" என்றனர்.

கருப்பையா, வள்ளலார் பாட்டையும் படித்துள்ளார் என்பதறிந்து நாங்கள் வியப்புற்றோம்! அவர்கள் எக்குறையும் இல்லாமல் இறுதிவரை வாழ்ந்து ஊரவர் சீராட்டிப் பாராட்ட இயற்கை எய்தினர்! அஃது இயற்கை தானே! அவரவர் வாழ்வுக்கென ஒரு வரம்பு உண்டு என்பதால் தானே சங்கச் சான்றோர் "நினக்கென வரைந்த எல்லை" நலமுற வாழ்க! என்றனர்!

தாத்தா ஏதோ வேலையில் இருந்து வந்தீர்கள். என்னைக் கண்டதும் அமர்ந்து விட்டீர்கள்! உங்களுக்குரிய பணிகளுக்கு இடையூறு இல்லாமல் இருக்கும் போது தொழில் பண்ணையைப் பற்றிய விளக்கம் தந்தால் நன்றாக இருக்கும்! 'ஊருக்கு ஒருவர்' பற்றி நேர்காணல் கண்டாய்! அந்த நேர்காணலால் என்ன பயன்? நீ ஏதாவது செய்தாயா? தேன் இனிமையானது என எழுதி என்ன பயன்? தேனைத் தரவேண்டும் அல்லவா!

தாத்தா, நான் பாட்டியோடு பேசியபின் என் தொழிற்சாலையில் செய்த மாற்றங்கள் பல. இங்கே உங்கள் தொழிற்பண்ணை பற்றிக் கேள்விப் பட்டதும் நாம் ஏதாவது இன்னும் செய்யமுடியுமா? என்பதை அறியவே வந்தேன்! தாத்தா பாட்டி வழியே, பேரன் வழியும் ஆதல் முறை தானே!

ஆம்! தாத்தா பாட்டி வழியினும் பேரன் பேர்த்தியர் வழியே மேலும் உயர்வானது என்பது மேலும் சிறப்பல்லவா!

**நம் தொழிற்பண்ணையைப் பார்த்துவிட்டு, நான் என் தொழிற்சாலையில் செய்தவற்றைச் சொல்கிறேன் தாத்தா!**

பாட்டி சொன்னது போல், தம்பி நல்லதம்பி தான். மாலையில் ஒரு சுற்று நாம் பார்க்கலாம். பேசலாம்! இனி நண்பகல் உணவு வேளை! உணவுக்குச் செல்லலாம்!

**பகல் 12 மணி தானே ஆகிறது தாத்தா!**

ஆம்! காலை எட்டுமணி முதல் 12 மணி முடிய முற்பகல் வேலை! உணவுக்கு இடைவேளை 12 மணிமுதல் 2 மணிவரை; இரண்டு மணி முதல் மாலை 6 மணிவரை பிற்பகல் வேலை. நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேர வேலை!

**உணவுக்கு ஒருமணி இடைவேளை போதும் அல்லவா!**

உணவுக்கு அவ்வளவு நேரம் கூடத் தேவை இல்லை. ஓய்வு எடுப்பவர் ஓய்வெடுப்பர்; செய்தித்தாள் பார்ப்பவர் பார்ப்பார்; நூல் நிலையம் சென்று படிப்பவர் படிப்பர்; நூலகமும் படிப்பகமும் அடுத்தடுத்து உள்ளன. ஓய்வறையும் அடுத்தே உள்ளது. ஆதலால் விரும்பியவாறு பயன்படுத்தலாம். மனைவி மக்கள் நண்பர்களோடு உரையாடலாம். அதனால்தான் இரண்டு மணிநேரம் இடைவேளை! மேலும் எட்டுமணி நேரவேலை; எட்டுமணி நேர ஓய்வு; எட்டுமணிநேர உறக்கம் என்ற உலகத் தொழிலாளர் சட்டமுறைமையைக் கடைப்பிடித்ததும் ஆகுமே;

**உணவகத்துக்கு வந்துள்ளோம் நாம். சாப்பிடுபவர்கள் சாப்பிடுகிறார்கள்; உணவைப் படைக்க யாரும் இல்லையே தாத்தா!**

உணவை ஆக்கி வைக்கச் சில குடும்பத்தவர்கள் ஆணும் பெண்ணுமாக வந்து அந்தந்த வேளைக்குரிய உணவை ஆக்கி வரிசையாக வைத்து விடுவர். அவர்கள் வேலை உணவு வேளை முடிந்தபின் வந்து உணவிருந்த கலங்களைக் கழுவி ஒழுங்குபடுத்த

வேண்டியதுதான். உணவுத் தட்டுகள் வரிசையாக அடுக்கி இருப்பதைப் பார். ஒரு தட்டை எடுத்துக் கழுவி வேண்டும் உணவை அவரவரே எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டியது. மேலும், வேண்டுமானால் வேண்டியதை எடுத்துக் கொள்ள வேண்டியது. 'எடுத்தூண்' முறை இது. இதனால் அவரவர்க்கு வேண்டியது மட்டும் வேண்டிய அளவுக்கு எடுப்பர். அதனால் உணவு வீணாகாது! அவரவர் உண்ட தட்டுகளைக் கழுவி வைக்குமிடத்து வைத்துவிட்டுப் போய்விடுவர். வா! உனக்கொரு தட்டை எடுத்துக் கொள்! அங்கே உள்ள குழாயில் கழுவிவிட்டு, வேண்டும் உணவை எடுத்து உண்!"

**தாத்தா, சமைப்பவர்கள் தொடர்ந்து சமைப்பார்களா? அவர்களுக்கும் மாற்றுத் திட்டம் உண்டா?**

சமைப்பதற்கென சில குடும்பங்கள் உள்ளன. அவர்களாகவே மூன்று மூன்று குடும்பங்கள் ஒருநாள் சமையல் எனத் திட்டப்படுத்திக் கொள்வர். ஒரு குடும்பத்தவர்க்கு வரமுடியாத நிலை இருந்தால் இன்னொரு குடும்பத்தவர் முன்னரே திட்டப்படுத்தி வந்து சமையலில் ஈடுபடுவர். வா! உண்டு கொண்டே பேசலாம்!

**எப்படித் திட்டமிட்டுச் செய்தாலும் கூடுதலாக - குறைவாக உணவு மிஞ்சவும் - போதாமல் ஆகவும் - முடியுமே!**

அப்படி ஆகத் தான் செய்யும்! பெரும்பாலும் குறைவாகாமல் செம்மையாகக் கணக்குப் பிடிபட்டு விட்டது. அப்படி மிஞ்சினால் மாடுகள் உள்ளன. ஆதலால் அவற்றுக்கு புளிங்காடியாகிய நல்ல உணவுக் குடிநீர் கிடைக்க வாய்ப்பாகும். வீணாகாது. காய்கறிகளையும் விரும்பித் தின்னும்; காக்கை குருவி முதலியவை தின்னவும் பயன்படுமே!

நல்ல திட்டமிட்ட செயற்பாடு தாத்தா!

பட்டறிவைப் பயன்படுத்தினால் எந்தத் திட்டமும் நல்லதிட்டமேயாம். படிப்பறிவோடு பட்டறிவும் கூடும்போது தான் திட்டங்கள் வெற்றி அடைகின்றன. வெறும் படிப்பறிவு, "ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா?" என்பது போல்தான் ஆகும்.

**தாத்தா ஊரில் இருந்தவர்களே இத்தொழிற்பண்ணையில் உள்ளார்களா? இவர்கள் வேறானவர்களா?**

ஊரில் இருந்தவர்களே தொழிற்பண்ணைக்கு வந்து விட்டால் ஊரும் ஊர்த்தொழிலும் பாழாகிப் போகும் அல்லவா! அங்கே இருந்து சிலர் வந்துளர். அவர்கள் தொழில் தேர்ச்சியுடை

-யவர்களும், பிறர்க்குத் தொழிற் பயிற்சி தரக்கூடியவர்களும் ஆவர். அவர்கள் பயிற்சி தர வந்தாலும் ஊரில்தான் அவர்கள் தங்கினார்கள். நடந்துபோகும் தொலைவு தானே ஊருக்கும் பண்ணைக்கும்! பாட்டி அங்கே இருப்பதால் எனக்கு மட்டும் விதிவிலக்கு. இங்கேயும் இருப்பேன்; தங்கிக் கொள்ளவும் செய்வேன்; ஊருக்கும் போவேன். தங்கியிருக்கவும் செய்வேன்.

**தொழிற்பண்ணைக்கு உரிய உழைப்பாளர்களை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள் தாத்தா?**

எந்தத் தாளிலும் எவ்வறிக்கையிலும் இதுவரை காணாத வகையில் ஒரு விளம்பரத் துண்டறிக்கை அச்சிட்டோம். பெரிய தாள்களில் விளம்பரம் செய்தால் தாங்காக் கூட்டம் வரலாம். சிலரைத் தள்ளவும் நேரலாம். அவ்வாறு நேராவகையில் பக்கத்துப் பத்துப் பதினைந்து ஊர்கள் அளவில் துண்டறிக்கை வழங்கினோம்.

**அந்தத் துண்டறிக்கைச் செய்தி என்ன தாத்தா?**

அத்துண்டறிக்கை தொழிற்பண்ணைக் கோப்பிலே உள்ளது. வா, பண்ணை அலுவலகம் செல்வோம்! எதற்கும் வரலாறு முறையாக எழுதுவதும் கோப்புகள் பேரேடுகள் வைப்பதும் வேண்டும் அல்லவா! பின்னால் வருபவர்களுக்கும் இப்பண்ணை தொடங்கிய நிலை, நடத்தப் பெற்ற நிலை ஆயவை அறியுமாறு வைக்கப் படும் ஆவணம் அதுதானே!

**நல்லதம்பி துண்டறிக்கையைப் பார்த்தான்; ஊன்றிப் படித்தான்;**

“நீங்கள் சொந்தமாக வீடு இல்லாதவரா!

கூலி வேலை பார்த்து வருபவரா?

உழைத்து உண்ண விரும்பும் மானமுள்ள பிச்சைக்காரரா?

ஏதிலியராகக் கற்றுக் கொண்டு இங்கேயே தொழில் செய்ய விருப்பம் உள்ளவரா?

எளிமை நாட்டமும் உயிர் நேயமும் உடையவரா?

வள்ளலார் ஒப்புரவுப் பண்ணை

கரும்பூர் (முரம்பு)க்கு நேரில் வருக.”

பிற்குறிப்பு: **சாதி சமய கட்சி அரசியல் சாராத நிறுவனம் இது. எவர் பரிந்துரையும் வேண்டுவது இல்லை; நேரில் வருக.**

படித்துவிட்டாய் அல்லவா! இந்த அறிக்கையும் நாட்டு நடப்பைக் கொண்டு நம்பியவர்கள், நம்பாதவர்கள் உண்டு! கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் வேலை! மாநில நடுவண் அரசுகளின் கொடையையும் வெளிநாட்டு வரவையும் நோக்கிய ஏற்பாடு! என்று பேசினவர்களும் ஐயமுற்றவர்களும் உண்டு. ஆனாலும் உழைத்து வாழ விரும்பும் மானப் பிறவியரும் அற்றுப் போகவில்லை! என்பதை மெய்யாக்குவது போலப் பலப்பலர் முதல்நாளே வந்தனர். எங்களுக்கு ஒன்று புலப்பட்டது: "உழைக்க விரும்பும் பலர், உழைப்பு வாய்க்காமையால் சோம்பராகவும் கையேந்துபவராகவும், தவறான வழிகளில் ஈடுபடுபவராகப் போகின்றனர்".

**உண்மை தாத்தா, உழைக்க விரும்புபவர்க்கு உழைப்பு வாய்ப்பதில்லை. பயிற்சி தந்து ஊக்குவார் இல்லை. தொழிலில் உயர்வுதாழ்வு கற்பிக்கப் பட்டிருந்தது. இடைத்தரகர்கள் ஏமாற்று இருந்தது. இப்படிப்பட்ட காரணங்கள் தாம் உழைப்புக் கேடுகள்! இன்னும் சொன்னால் வன்முறைத் தூண்டல்கள்! தந்நலச் செயல்பாடுகள்!**

சரியாகச் சொன்னாய்! கிழக்குப்பக்கம் சாலை இயல்பாக உள்ளது. சாலைக்கு மேற்கேதான் 110 குறுக்க நிலமும்; அதற்கு இயற்கை வேலியாகப் பனைமரங்களை உண்டாக்கத் திட்டமிட்டோம். வேலிக்கு வேலி, பயனுக்குப் பயன். கண்கண்ட கற்பக மரம் பனைதான்! **ஏழ்பனைநாடு** என்பது நம் முந்தையர் வாழ்ந்ததும் கடல்கோளுக்கு முந்தியதுமாம் நிலப்பகுதி. ஏழெழுநாடே **ஈழமாகச்** சுருங்கியது. அதில் ஏழ்பனை நாடே **யாழ்ப்பாணம்** என்று இன்றும் உள்ளது. பழம்பாண்டியன் நிலந்தரு திருவிற்பாண்டியன் வாழ்ந்த மணலூர் அது. அங்கிருந்தே இப்பொழுதுள்ள மதுரையைத் தலைநகராக்கிப் பாண்டியர் வந்தனர் என்பது வரலாறு.

**நம் பழவரலாறு, பாதுகாப்பு வேலி, பயன்பாடு, எதிர்கால நலம் என்பவை எல்லாம் எண்ணிச் செய்த திட்டம் இது தாத்தா!**

ஆம்! ஆம்! நுழைவாயில் அலுவலகம், வரவேற்பு, நூலகம், படிப்பகம் ஓய்வறை, அரங்கம் என்பவற்றை அமைத்தோம். சிறுவர் பெரியர் விளையாட்டு வெளியரங்கம் என அமைத்தோம்.

**தாத்தா, உடல் நலவிளையாட்டையும், உளநல நூல்களையும், கலந்தாய்வு நிகழ்வுகளையும் அடுத்தடுத்த**

**அமைவில் செய்தமை அருமையான அமைப்பு மட்டுமன்று! மீட்டெடுப்புப் பணியுமாம்.**

இன்னும் இவற்றைச் சார்ந்தே மழலையர் பள்ளி, வளர்ந்தோர் பள்ளி, தொழிற்பயிற்சி நிறுவனம் என்பனவும் அமைக்கப்பட்டன.

உணவுக்கு அடுத்த தேவை உடை. ஆதலால், பத்து அறைகளை வடக்குப் பக்கத்தில் கட்டினோம். ஓர் அறைக்கு நான்கு தறிகளாக நாற்பது தறிகளை உருவாக்கினோம். இயல்பாக ஊரில் இருந்த தறிகளில் பயிற்சி பெற்றுத் தொழில் செய்தவர்களைக் கொண்டு நூற்கவும், சிட்டம் போடவும், பாவு பரப்பவும் தக்க அகன்ற தெருக்களை அமைத்து வேப்பமரங்களை இரண்டு பக்கங்களிலும் உண்டாக்கினோம். வெப்பக்காலத்தில் குளுமை தரும் மரங்கள் அல்லவா அவை! பண்ணையில் வேலை செய்பவர்கள் குடும்பங்கள் தங்குவதற்கு வீடுகள் வேண்டுமே! அவற்றையும் கட்டினோம்; ஒரு வரிசைக்குப் பத்து வீடுகள்; எதிரே பத்து வீடுகள்; இரண்டு தெருக்கள் தனியாள்கள் தங்குவதற்குப் பொதுவான பெரிய கூடமும் அமைத்தோம். மேற்குப்பக்கம் மிகமேடான பகுதி; நிலமோ சரளையும் செம்மண்ணும்; அதன் அடிவாரம் இயல்பாக அமைந்திருந்த பள்ளத்தாக்கு. பெய்யும் மழைநீரை வெளியே ஓடிப் போகவிடாமல் தேக்கி வைத்து உழவுத்தொழில் செய்ய வாய்த்த இயற்கையான வாய்ப்பு; நிலத்தடி நீர் கிடைக்கவும் வாய்ப்பு.

**தோண்டவோ, வடிகால் அமைக்கவோ, கரைபோட்டுத் தேக்கவோ வேண்டாமல் இயற்கையே செய்து வைத்த நீர்த்தேக்கம் கிடைத்து விட்டது! மழைபெய்யும் நாளில் தண்ணீரைத் தடுத்து நிறுத்தும் தடுப்பணைகள் கட்டாமல், எட்டாத் தொலைவுக்குக் குடி தண்ணீர் கொண்டு செல்லும் அரசின் செயற்பாடு இல்லாத நிறைவான இயற்கைச் சேமிப்பும் பயன்படுத்தமும் இதுதாத்தா!**

இதனைப் புறநானூற்றுப் புலவர் சொல்கிறார். ஆட்சி நடத்தியவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவர்களைப் பற்றி நாம் ஏன் எண்ண வேண்டும்! நம் திட்டத்திற்கு நாமே பொறுப்பு என்பதால் இயல்பான நீர்வரத்தும், சேமிப்பும் வாய்த்துவிட்டன.

நீரை நிலத்துக்குக் கொண்டு செல்லுவதற்குக் கால்வாய்களும், வாய்க்கால்களும் அமைத்தால் போதும்; நெல், கரும்பு, வாழை ஆகிய நன்செய்ப் பயிர்கள் பயிரிடலாம்.

**கால்வாய் அகழ்ந்த மண் கரையமைக்கப் போதுமானது. வேறு கரைக்கென்று மண்கொண்டு வரவேண்டியது இல்லை.**

ஆம்! அப்படித்தான் செய்தோம். மண் நல்ல செம்மண். ஆதலால், அந்த மண்ணைக் கொண்டு செங்கல் அறுத்துச் சூளையும் போட்டோம். கட்டடங்களுக்குச் செங்கல் வேண்டுமே!

**கல்லும் வேண்டியதிருக்குமே தாத்தா!**

ஆம், வீட்டுக்குக் கடைகால் போடக் கட்டாயம் கல்வேண்டும். அதற்கும் வாய்ப்பு இருந்தது பள்ளத்தாக்கில் கற்பாறை இருந்தது. வெடிவைத்துக் கல்லை எடுத்துப் பயன்படுத்தினோம். அப்பள்ளமும் நீர்தேக்க உதவியாகவே அமைந்தது.

**எல்லாமும் பல்பயன் செய்வதாக அமைதல் பெரிய பேறுதான்.**

சிந்தித்தால் எதனையும் எவ்வழியும் பயன்படுத்தலாம். ஒரு தொழிலால் மற்றொரு தொழிலையும், தொழிற்பயனையும் கொள்ளலாம் என்பது தானே "வினையால் வினையாக்கிக் கோடல்" என்பது! கல்கீழே இருப்பதால் தேங்கிய நீரும் விரைவில் உள்வாங்கிப் போய்விடாதே!

**வறண்ட மேட்டுநிலம் கல்லாஞ்சரளை - முள்ளும் முடலும் ஆகிய இடம் வளமான நிலமாக மாறி இருப்பது அறிவார்ந்த முயற்சியால் தான்!**

மேடா காடா வயலா கடற்பகுதியா பயன்படுத்துவார் முயற்சியைப் பொறுத்துத்தான் வறண்டும் போகிறது. வளமும் செய்கிறது இது ஔவையார் சொன்னதுதானே! ஆமாம்!

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே! (187)**

என்னும் புறநானூற்றுப் பாடல்தானே தாத்தா!

நல்ல பேரன் தான்; பாப் போடும் தறிவேலையன் என்றாலும், படிக்கவேண்டும். நூல்களையும், பாடல்களையும் படித்துள்ளாய். அப்படித்தான் இருக்க வேண்டும்! தொழிலும் வேண்டும்; மனநிறைவும் வேண்டும்! தொண்டும் வேண்டும். பலவும் கூடியது தானே உலகியல் வாழ்வு! இலக்கியம் மகிழ்வுக்காகத் தான் என்பது சுருக்கப்பார்வை. குறிக்கோள் வாழ்வுக்கு அது வழிகாட்டி என்று கொள்வதே

இலக்கியப்பயன்! இலக்கு - குறிக்கோள் - இல்லாதது இலக்கியம் ஆகுமா?

**பாட்டியிடம் வந்து பேசியபின் ஏற்பட்ட படிப்பினை, அதற்குமுன் எனக்கு இருந்த ஆர்வத்தைப் பெருக்கியது. இப்பொழுது உங்கள் உரையால் மேலும் ஆழமும் அழுத்தமும் பெறுகின்றது. எவர் என்ன சொல்லியிருந்தும் என்னபயன்? எடுத்துக் கொண்டால் தானே!**

சரியானதே! இந்த நீரளவுக்குத் தக நன்செய்ப் பயிர்; அதற்கு அப்பால் உள்ளது புன்செய்ப் பயிர் செய்வதற்கு; அதுசற்றே மிகுதியான இடம். மழையை நம்பிப் பயிரிடப்படுவது. கிணறுகளும் உண்டு தோட்டப் பயிர் செய்வதற்காக! எல்லாமும் தேவைதானே!

**என்னென்ன பயிர்கள் புன்செயில் உண்டாக்கப் படுகின்றன தாத்தா!**

பருத்தி, துவரை, நிலக்கடலை, தினை, சாமை, கேழ்வரகு, வரகு, சோளம், குதிரைவாலி, எள், காய்கறிக்கு வேண்டும் அவரை, பீர்க்கு, பூசுணை, சுரை, வெண்டை, கத்தரி, கொத்தவரை முதலியவை. தேங்காயும் வேண்டுமே; ஆதலால் தென்னை, மா, பலா, புளி என்பவை உள்ளன.

**ஓரப் பகுதிகளை விட்டுவிட்டு உட்பகுதியெல்லாம் வேளாண் பகுதி ஆக்கி விட்டீர்கள்! இது பயிர்க்குப் பாதுகாப்பு அரண் போன்றதும் ஆயிற்று!**

அவ்வாறு எண்ணித்தான் செய்தோம். வேளாண் பகுதி இதுவென்றால் இவ்வேலையில் ஈடுபட்ட குடும்பத்தவர்களுக்கும், இத்தொழிலுக்குப் பயன்படும் ஆடுமாடுகளுக்கும் வீடும் தொழுவும் வேண்டுமே! அதற்காகத் தென்பகுதியை ஒதுக்கிவிட்டோம். பயிர்த்தொழிலில் ஈடுபடுபவர் குடியிருப்பு வீடுகள், சேமிப்புக் கிடங்குகள், தென்பக்கத்தின் மேற்கிலும், காளைமாடுகள், பசுமாடுகள், ஆடுகள் ஆயவற்றுக்கு வேண்டும் தொழுவங்கள், அடைப்புகள் ஆயவை அதற்குக் கிழக்குப்பக்கமும் அமைக்கப்பட்டன. மாடு, ஆடுகள் தாமே உழவர்களின் உயர் செல்வம் உழவு வேலைக்குக் காளைகள்; எருதுகள், பசுக்கள் பால்வளம் தருவதற்கு; ஆடுகள் பால், உரம்ஆயவற்றுக்கு! இயற்கை உரம் வேண்டும் அளவு இங்கேயே கிடைத்து விடுகிறது. பசுந்தாள் உரக்குழிகள் தென்கீழ்த் திசையில் அமைக்கப் பட்டுள்ளன.

சிலசெடிகளை ஆடுமாடுகள் தின்னா. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை: ஆவரை, கொழுஞ்சி என்பவை. அவை மண்ணின் கொழுமைக்குரியவை. அவற்றைப் பனை வரிசையின் ஊடு இருக்கப் பார்க்கலாம். தோப்புப் பகுதியை அன்றி மற்றை இடங்களில் பாரிய மரங்கள் இரா. அவை பயிர் வளர்ச்சிக்குக் கேடானவை. மண்ணின் உரத்தை வாங்கிவிடும். நீரையும் வாங்கிவிடும். நிழலால் பயிர் வளத்தையும் கெடுக்கும். இன்னும் ஒன்றைக் கூர்ந்துபார்! எங்காவது **வேலிக்கருவேல்** என்னும் முள்மரம் இருக்கிறதா? வேலிக் கருவேல்போல் நிலவளக் கேடான மரம் எதுவும் இல்லை. வேரை விரித்து உரத்தையும் நீரையும் அட்டை உறிஞ்சுவது போல் உறிஞ்சும். மூளையுடைய சேரலத்தான் (கேரளத்தான்) தன்மண்ணில் வேலிக் கருவேல் வர ஒட்டாமல் தடுத்தான். ஒட்டியிருந்த நாம் அதனைக் கண்டு கொள்ளமுடியாமல் - மூடத்தனமாய் - வளர்த்துக் கரியாக்கி அற்பப் பயன் கொள்கிறோம். வறண்ட முகவை மாவட்டம் முழுதுறக் கெடுவது அதனால்தான்!

**ஆழமான அனைவரும் அறிந்து போற்ற வேண்டிய செய்திகள் இவை! அப்படியானால் நிலத்தைப் பண்படுத்தத் தொடங்கிய போதே இதைச் செய்து விட்டீர்களா தாத்தா?**

ஆம்! நிலத்தின் கல்கரடு கற்றாழை கள்ளி முள் கருவேல் ஆயவற்றை நீக்கி ஒருப்படுத்திய பின்னரே திட்டங்களை மேற்கொண்டோம். வடக்கு மேற்கு தெற்கு என முப்பக்கமும் பார்த்துவிட்டோம். நன்செய் புன்செய் தோட்டம் தோப்புப் பற்றியும் அறிந்துவிட்டோம். வேதிம உரம் பயன்படுத்தி மண்வளம் கெடுக்காமல் மண்வளம் பெருக்கும் இயற்கை வேளாண் உரம் பற்றியும் பார்த்து விட்டோம். இதோ கிழக்குப் பகுதியைப் பார்க்கிறோம்.

ஆம் தாத்தா!

**தறி உழவு ஆயவற்றுக்கு வேண்டிய கருவிகளை உருவாக்கித் தரும் தச்சு, கொல்லுத் தொழிற்சாலைகளை இடைவெளிப்பட அமைத்துள்ளோம்.**

அவ்வேலை நெருக்கடி இல்லாமல் நடைபெறச் சுற்றிலும் இடவாய்ப்பு வேண்டும் அல்லவா! அதனால் இடைவெளிவிட்டே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் கடைசியில் அல்லது நுழைவாயிலை அடுத்து இரண்டு **முடிதிருத்தகங்கள்** உள்ளன.

**தாத்தா இவர்கள் அனைவரும் பரம்பரைத் தொழிலர்களா?**

நல்லதம்பி, இங்கே பிறப்பு வழிச்சாதியோ, தொழில் வழிச் சாதியோ இல்லை என்பதை நீ எண்ணியிருந்தால் உனக்கு இந்த ஐயம் வராது! எல்லோரும் ஒத்த மனிதர்; மனிதச் சாதியர்! எவரும் எத்தொழிலும் செய்யலாம். எல்லோருக்கும் முறை சொல்லி அழைக்கும் பழக்கம் உண்டு. ஆதலால் பாரதியார் சொன்னது போலத் 'தமிழச் சாதி' எனலாம்! அல்லது பாவாணர் சொன்னது போல 'குலமற்ற தமிழர்' எனலாம்.

**பெரிய செய்தி தாத்தா! நச்சுப் பல்லையே பிடுங்கி விட்டீர்கள்! நாட்டை அலைக்கழிக்கும் 'நஞ்சு' சாதிதான். சாதிச் சமயம்தான், சாதிக்கட்சிதான், சாதி அரசியல் தான்! இவற்றுக்கு இடமில்லாதது 'ஒப்புரவுத் தொழிற் பண்ணை! என்பது உலகுக்குப் புதுமை தாத்தா!**

நீ சொல்வது சரிதான்! நெடுநாள் நோய், சாதி! இங்கே தடுத்து விலக்கப் பட்டுள்ளது என்றாலும் இவர்கள் சாதி உலகத்தின் பிடிக்குள் இருந்தவர்கள்; இவர்களைத் தேடிப் பார்க்க வருபவர்கள் சாதிப் பிடிப்பை விடாதவர்கள். அவர்கள் வரும்போது சிற்றெறும்பு போல் ஊரவும் செய்கிறது. கட்டெறும்பாகவோ தேளாகவோ ஆகாமல் பார்த்துக் கொள்வதில் விழிப்பாகவே இருக்க வேண்டியுள்ளது. அதற்கு வள்ளலார் பேருதவி செய்கிறார்! வள்ளுவர் வரைகோடு போட்டுத் தந்து விட்டார். அதனால், கிழமைதோறும் அக்கிழமை பற்றிய கலந்துரையாடல், வளர்நிலை, குறைநிலை பற்றிய மூத்தவர்கள் உரை, சால்பியப் பொழிவு என்பவை கட்டுக்குள் வைத்துள்ளன. இங்கே வருகின்றவர்களுக்கும் ஒருவாக்குறுதி பெற்றே உள்ளே வரவோ தங்கவோ இசைவு வழங்கப்படுகிறது.

**என்ன வாக்குறுதி தாத்தா?**

"யான் என் உரிமை உறவால் அல்லது நட்பால் பார்க்க வந்தேனே அல்லாமல், சாதி சமயம் கட்சி அரசியல் பற்றி எதுவும் பேசவரவில்லை என்பதை, என்மனச் சான்றின் ஆணையாக உறுதி சொல்கிறோன்" என்று உறுதி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகே உள்ளே புகவும், உரியவரைப் பார்க்கவும் முடியும்.

**இது கடினமும் இக்கட்டுமான செயல் இல்லையா தாத்தா! சிலர்க்குச் சிறைக்குள் புகுகிறோமோ என்ற எண்ணம் கூடவரலாமே!**

தம்பி நீ சொல்கிறபடி கடினமும் அடக்குமுறையும் உள்ளதாகவே தோற்றம் தரும். பக்கமெல்லாம் நாற்றக்குட்டையும் சாய்க்கடையுமாக இருக்கும் போது நாம் மூக்கைப் பொத்தினாலும் காற்று அள்ளிக் கொண்டு வந்து தள்ளாமல் விடுவது இல்லையே! அப்பொழுதுகளில் மூக்கைப் பொத்தக் கை தானே முந்துவது போல் முந்தித் தடுக்கத்தான் வேண்டும்! இல்லையானால் வெளி முடைநாற்றம் உள்ளேயும் புகுந்து விடத்தான் செய்யும்.

**என்னிடம் எவ்வுறுதியும் வாங்காமல் உள்ளே வரவிட்டார்களே தாத்தா?**

நீ தாத்தாவைப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாய். அப்படி முறை சொல்லி வருவார், என்னைப் பார்க்க வருபவர் என்பவர், எப்படிப்பட்டவராக இருப்பார் என்பது அவர்களே அறிவார்கள். ஆதலால், உன்னிடம் அவ்வுறுதி வாங்கவில்லை. அவர்களுக்கே ஐயமுண்டானால் உறுதி எடுக்காமல் உள்ளே விடமாட்டார்கள்!

**தாத்தா, ஓரிடத்திலும் 'சலவைச்சாலை' இல்லையே தாத்தா!**

ஆம்! அதற்கெனத் தனிநிலையம் இல்லை! அவரவர் துணியை அல்லது அவரவர் வீட்டுத் துணியை அவரவர்களே துவைத்துக் கொள்ளவேண்டும். தேய்ப்புக்கும் தனியே ஆள் இல்லை. துணிதேய்ப்புப் பற்றி பாட்டியிடம் கேட்டிருந்தால் சிரியாய்ச் சிரிக்கச் சொல்லி இருப்பார்.

**அப்படி என்ன வகைத் தேய்ப்பு தாத்தா?**

எங்கள் சமையல் அடுப்பில் தீக்கங்குகள் கிடக்கும் அல்லவா! அவற்றை எடுத்து சிறுகுண்டாச் சட்டியில் போட்டால் சட்டி வெப்பமாகும்! அந்த வெப்பத்தைக் கொண்டே தேய்த்துவிடுவார்! மின்னும் வேண்டா! கரியும் வேண்டா! தேய்ப்புப் பெட்டியும் வேண்டா!

**இவ்வளவு எளிமையும் சுழுவுமான வழி இருப்பது இன்றுதான் தெரியும்.**

இனி, அம்மி திரிகை ஆட்டுரல் குந்தாணி உலக்கை ஐந்தறைப் பெட்டி என்பவை எல்லாம் காட்சிக் கூடத்தில் கண்டால் தானே உண்டு. ஆனால் நம் பொருளைக் காட்சியில் வைக்கவாவது தெரிந்ததா? பிறநாட்டான் என்றால் முதல் உருவாக்கம் முதல் அதன் வளர்நிலை வாரியாக வைத்துக் காட்சியாக்கி விடுகிறான்.

நாமோ உள்ள நல்லவற்றை எல்லாம் இழக்கவே பிறந்த பிறவிகள்! எதைப் பேணினோம்? போற்றினோம்!

கல்லுப்பயறு உனக்குத் தெரியுமா? மின்னிக்கொடி மின்னிக்காய் தெரியுமா? உழவர்களே மறந்து விட்டார்கள்! இங்கே வா! இதோ பார்! கல்லுப் பயற்றுக் கொடி! பச்சைப் பயற்றுக்கும் சிறிது. இதோ பார்! இது மின்னிக்கொடி! நாற்றுச் சோளத்தின் ஊடே கொடிக் கொடியாகப் படர்ந்து வெடித்துக் கிடக்கும். அடுத்துப் பயிரிடும் போது தானே உண்டாகிவிடும். இக்கொடிகள் மாட்டுக்கு ஊட்டமும் சுவையும் மிக்க தீனிகள்! அதன் நிறம் கருதி, நரிப்பயறு எனச் சில இடங்களில் வழங்கப்படுகிறது.

**ஏதோ தனி உலகத்துக்குள் வந்தமாதிரி இருக்கிறது தாத்தா?**

அப்படி ஆகிவிட்டது **புதுமை மோகம்! உலகமயம்** என்னும் **வஞ்சக வலைப்** பின்னல்! இன்றைக்கும் மீட்டெடுக்க முடியும்! காண்டாவிலங்கைக் காக்க பல்லாயிரம் குறுக்கக் காடு நீர்நிலைகளை அரசு அமைத்திருக்கிறது. அதைக் காக்க வேண்டியது தான்! இயற்கை வேளாண்மை முறையைக் காக்காமல் கூடத் தொலையட்டும்! மண்ணின் உயிர்வளமாம் மண்புழு மீட்டுருவாக்கப் போலிமை வேண்டுமா?

இங்கே வா இந்தக் கிணற்றைப் பார்! இந்த மேட்டுக்குத் தெற்கே சோலையாறு. வடக்கே வடஆறு. இரண்டுக்கும் இடைப்பட்டது இம்மேடு என்றாலும் நிலத்தடி நீர் நன்றாகக் கிடைக்கும். கிணற்றில் நீர் தெரிகிறதா?

**இல்லை தாத்தா! ஒரே இலைதழைகளே தெரிகின்றன!**

கிணற்றின் உள்ளேயே ஆவிரை, கொழுஞ்சி கட்டுக்கட்டாகப் போட்டுவிடுவோம். செடிகள் நீரில் அழுகி உரம் நீரில் சேரும். அந்த நீரை விட்டால் எல்லாப் பயிர்க்கும் செடிக்கும் ஒப்புரவாக நீரும் உரமும் கிடைக்கும் அல்லவா! இதை எங்கள் அப்பா செய்தார். யார் யாரோ புதுமையாகப் பார்த்தார்கள்! ஆனால், வரத்தான புதுமை மோகம், படிப்பாளிகளின் பொய்ம்மை, அறிவாளிகளின் வேதிம உரத்தை விடவில்லை! நான்கு மடங்கு எட்டு மடங்கு பலன்தரும் என்ற மயக்கிலே நிலவளக் கேடு செய்தனர். அதன்விளைவு எவ்வுணவிலும் நச்சுக் கலப்பு இல்லாமல் இல்லை என்னும் ஒருபேறு வாய்த்துள்ளது.

இங்கே பார்! இறைவைக் கிணற்று வாய்க்காலில் என்ன உள்ளது. ஒரு தொட்டி உள்ளது அல்லவா! இத்தொட்டியில் தானே நீர் விழுந்து வெளிப்பட்டு வாய்க்கால் வழியே செல்கிறது. தொட்டியின் உள்ளே சணல்மூடை உள்ளதே; அதில் ஆட்டுப்பிழுக்கை, மாட்டு எரு பொடியாக்கி வைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து நீரொடு கலந்து ஆட்டெரு, மாட்டெரு ஆகியனவும் சேர்கிறது. நிரவலாக எல்லாப் பயிர்க்கும் நீரும் உரமும் சேரவில்லையா? ஒப்ப வளர்க்கும் ஒப்புரவு இதுதானே!

மேட்டில் குடங்கள் உள்ளனவே பார்த்தாயா? அவற்றில் தொழுவில் கட்டிய மாட்டின் நீர் உள்ளது. அதுவும் நீரோடு கலந்து போகத் தான் வைக்கப்பட்டுள்ளது! இயற்கை உப்புநீர் உரம் (யூரியா) அல்லவா இது!

**பார்வைப் பண்ணை மட்டும் இல்லை தாத்தா! இயற்கை அறிவியல் பண்ணை தாத்தா இது.**

இது அறிவியல் என்றால் அவ்வறிவியலுக்கு மூலவர் செய் நேர்த்தியர் - எம் தந்தையார் தாம்! நிறையப்பேசி விட்டோம். இன்னும் எதுவும் கேட்க வேண்டுமானால் கேள்.

**இங்கே வேலைப்பார்ப்பவர்களுக்கு வீடு, உணவு, மருத்துவம் எல்லாமுண்டு. சம்பளம் உண்டா?**

சம்பளம் எவருக்கும் இல்லை. அவர்கள் கூலிகள் இல்லையே! இப்பண்ணையின் உடைமையாளர்கள் தாமே, அவர்கள் அனைவரும். அவர்களுக்கு ஒப்புரவான உரிமைத் தொகை உண்டு; உரிமைப் பயன்களும் உண்டு.

ஒவ்வொருவர் நாடி நரம்புகள் தனித்தனி போல விரும்பங்களும் தேவைகளும் தனித்தனி இருக்கவே செய்யும். அதற்கென மாதந்தோறும் குடும்பத்தினர் எண்ணிக்கைக்குத் தக ஒரு தொகை வழங்கப்படுகிறது. ஆறுமாதங்களுக்கு ஒருமுறை 15 நாள்கள் அவர்கள் விருப்பம் போல் வெளியூர்களுக்கோ சுற்றுலாவுக்கோ செல்லலாம். பொங்கல் விழாவுக்கென ஒரு தனித்தொகை உண்டு. அத்தனை பேர்களுக்கும் புத்துடை வழங்கப்படும். அவ்வுடை ஒற்றைக்கு இரட்டையாக வழங்கப்படும்.

தையல்மனை, மருத்துவமனை, பொது அங்காடி என்பவையும் உண்டு. கரும்பாலை, செக்காலை, கிட்டங்கி, வங்கி, வழிபாட்டுக் கூடம் என்பன வரவேற்பறைக்கு வடபக்கம் அமைந்துள்ளன.

அவற்றைப் பற்றி நாளைக் காலையில் பார்ப்போம். 4 மணிக்குப் பண்ணை நலக் குழுவின் கூட்டம் உள்ளது. அக்கூட்டத்திற்கு நான் செல்லவேண்டும். அதுவரை நீ நூல்நிலையத்தில் படிக்கலாம்! அல்லது ஓய்வறையில் ஓய்வு கொள்ளலாம்.

**சரி தாத்தா!**

(பணிநலக் குழுவின் கூட்டம் ஆறுமணிக்கு முடிந்தது. பெரியவர், தம்பியிருக்கும் நூலகப் பகுதிக்கு வந்தார்.)

படிப்பில் உனக்கு நல்ல ஆர்வம் போல் உள்ளது. எல்லா நூல்களையும் வைப்பது இல்லை. தக்க நூல்கள் தாம் தக்காரை உண்டாக்கும். தொலைக்காட்சிகள் தாம், பண்பாட்டைப் பாழாக்குகின்றன என்றால், அப்படி நூல்களும், இதழ்களும் உள. ஒரு வேந்தன் சொன்னான். "**குழவிகாப்பவர் போல**" நீ நாட்டைக் காக்கவேண்டும்! என ஆள்பவன் ஆள்பவனுக்கே சொல்லியது என்றால், நம்பகமானது அல்லவா! அப்படியே நூல்களையும் நண்பர்களையும் தேர்ந்தெடுத்தே கொள்ள வேண்டும்.

உன்னை நீ உயர்த்த வேண்டுமா? என்னும் நூலை எடுத்து முதல்பக்கம் படிக்கும் போது நீங்கள் வந்தீர்கள்! படித்து முடிக்கும்போதும் நீங்கள் வந்துள்ளீர்கள்! திருவள்ளுவர், திருவள்ளுவர் தாம். அவர்தம்,

**"தன்னைத்தான் காதல னாயின்"**

என்பதற்கு மிகப் பெருவிளக்க நூல் "உன்னை நீ உயர்த்த வேண்டுமா!" என்பது! தன்னை நிலைப் படுத்துபவனும், தன்னை மேல்மேல் உயர்த்துபவனும் தலையாகச் செய்பவனும், நிலையில் இருந்து கீழ் இறக்குபவனும் தானே தான் என்பதொரு பாட்டு. பொது நூலகம் போல்வது அன்று இது. **அதியமான் ஔவைக்கு வழங்கிய நெல்லிக்கனி போல்வதாம் நூல்களையுடைய நூலகம் இது.**

உன் சான்று நல்ல சான்று தான்! நூல் என்ன செய்யும்? நூலைக் கற்பவனைப் பொறுத்தல்லவா நூலின் சிறப்பு உள்ளது. எத்தனை அறவோர்கள் அருளாளர்கள் வாழ்ந்துளர்! அவர்கள் உரை அவர்கள் வழிஞர்கள் தொண்டர்கள் என்பவர்களாலே பற்றப் பட்டிருந்தால் கூட எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கும். நாம் பூங்காவுக்குப் போகலாம் வா! ஆறுக்குமேல் எட்டுவரை அவரவர் விருப்பப் பொழுது அல்லவா!

**பூங்கா என்று சென்றால் பொழுது போக்கிடம் பார்வைச் செடிகள் கொடிகள் உள்ள இடம் என்பது தான் பொதுவாக எவரும் அறிந்தது. ஆனால் இது பயன் மரங்களும், மூலிகைச் செடிகளும், நறுமணப் பந்தல்களும், பயிரினப் பாதுகாப்புப் பண்ணையுமாக அல்லவோ இருக்கிறது!**

தம்பி, பயனில சொல்லாமை என்று ஓர் அதிகாரம் வகுத்தாரே திருவள்ளுவர். பயனில சொல்லாமை என்றால், பயனில செய்யாமை பயனில நினையாமை வேண்டும் அல்லவோ!

இதோ பார் அரிவாள் முனைப்பூண்டு. அரிவாள் முனைத் தேங்காய் துருவி போலும் இலை உள்ளதல்லவா! இதனை வெட்டுக்காயச் செடி என்பர் பொதுமக்கள். காயப்பட்டால் இச்செடியின் சில இலைகளை எடுத்துப் பிழிந்து புண்ணில் விட்டுப் பிழிசக்கையை அப்பிக் கட்டுப் போட்டால் சிறுகாயம் உண்டானாலும்; பெரிய காயம் உண்டானாலும் விரைந்து ஆற்றிவிடும்!

இது கரிசலாங்கண்ணி; இது பொன்னாங்கண்ணி, இலையைப் பார்! மேலும் கீழும் மாறி நில்லாமல் நேர் நேராகக் கண்போல் இருக்கும் இலை. பல் விளக்கிய சாற்றைத் துப்பினால் காய்ந்ததும் பசுமை மாறிக் கருமையாகிவிடும். அதனால்தான் கரிசாலை, கரிசலாங்கண்ணி, கரிப்பான் என்றனர். இது கீழ்வாய் நெல்லி! மஞ்சள் காமாலைக்கு மாமருந்து.

இது தும்பை, துளசி. தும்பைப்பூ வெண்ணிறத்தது. தூம்பு (குழாய்) வடிவத்தது. துளசி துளிர்த்து வெளிப்படும் போதே மணத்தோடு பிறப்பது. இது நாவல்மரம். இதன் கொட்டைப் பொடி, சர்க்கரைநோய்க்கு நன்மருந்து. ஓரத்துள்ள ஆவரையின் பூ, பொன்னிறப் பொலிவுடையது மட்டுமன்று. அப்பூவை உலர்த்திக் காயவைத்துப் பொடியாக்கினால் நல்ல தேநீர் ஆகும். இயற்கைத் தேயிலை! கேடு எதுவும் செய்யாதது. இவற்றை நான் சொல்லவேண்டியதில்லை. ஒவ்வொரு வகைச் செடியின் பெயரும் பயனும் இங்கிருப்பவர் எவரும் அறிவர்.

தமிழ்நாட்டின் கன்மா (சிமிண்டு), அமைப்புப் பார்த்தாயா? **மூ**வகை!

**ஒன்று:** "குமரியொடு வடவிமயம்" வரை!

**மற்றொன்று:** "தென்குமரி வடவேங்கடம்" வரை!

**இன்னொன்று:** எல்லைப் பிரிவு என்னும் தொல்லைப் பிரிவால் மண்ணிழந்து நிற்கும், இற்றைக் குறும்பரப்பு" பொழுது போய்விட்டது வா, போகலாம்.

**தாத்தா! பூங்காவா இது? பல்கலை ஆய்வுப் பண்ணையாக அல்லவோ உள்ளது!**

இல்லை இன்னும் செய்ய வேண்டியவை எவ்வளவோ உள. விரலுக்குத் தக்கபடி தானே வீக்கம் என்பது போல் எங்கள் நிலைக்குத் தகச் செய்துள்ளோம். இன்னும் செய்யத் திட்டமிட்டிருப்பவை படிப்படியாகச் செய்யப்படவேண்டும்.

**சாலையோடு சாலையாகப் போகிறவர்களுக்கு இவை என்ன தெரியும்?**

வள்ளலார் ஒப்புரவுத் தொழிற்பண்ணை என்னும் பெயராவது சாலையில் போகிறவர்களுக்குத் தெரியும்! வானிலே பறப்பவர்களுக்கு? பரபரப் புலகிலே விளம்பரம் வேண்டாத ஓர் அமைவிடம் இது!

(உணவு முடித்தபின் தங்கல் மனைக்குச் சென்றனர். பெரியவரும் உடன் தங்கினார்.)

**பாட்டியிடம் பேசியபின் ஏதோ உன் தொழிற்சாலையில் சிலவற்றைச் செய்ததாகச் சொன்னாயே! என்ன செய்தாய்?**

சொந்த வீட்டில் இருந்து வந்து கொண்டிருந்த தொழிலாளர் சிலர், வாடகை வீட்டில் இருந்து கொண்டு வேலைக்கு வந்தவர் சிலர், அவர்கள் கணக்கை எடுத்தேன். வாடகை வீட்டுக்காரர்களே மிகுதியாக இருந்தனர். ஏனெனில், வேலை தேடிவந்தவர்களே அவர்கள். உள்ளூராரில் சிலர்க்கும் சொந்த வீடில்லை.

**தொழிற்சாலைச் செலவு, எதிர்கால வைப்பு, எதிர்பாராத செலவு இவற்றைக் கணக்கிட்டேன். அதற்கு மேற்பட்டதே ஊதியம் எனச் சேர்த்துவந்தது.**

இவ்வூதியத்தில் வாடகை வீட்டினர்க்கு வாடகையில் பாதி தருவதாகத் திட்டப்படுத்தினோம். சொந்த வீட்டுக்காரர்க்கு வாடகைத் தொகை என இல்லாமல் ஒரு சேமிப்புத் தொகையாக அவர்கள் பெயரில் வைப்பகத்தில் சேர்த்து வந்தோம். ஏனெனில், நமக்குப் பயன் இல்லையே என அவர்கள் எண்ணிவிடக் கூடாதே என்பதால், படிப்படியே எளிய ஆனால் தேவையான அளவில் தொழிற்சாலைப்

பக்கத்திலே குடியிருப்பு வீடுகள் கட்டினோம். வீடுகட்டக் கட்ட, வேலை முந்துநிலை அடிப்படையில் வீடுகளைத் தந்து வாடகையை நிறுத்தினோம். சொந்த வீட்டுக்காரர் வந்து போகக், குறித்த இடத்தில் இருந்து குறித்த பொழுதில் அழைத்து வரவும் வேலை முடித்துக் கொண்டு போய்விடவும் வண்டி ஏற்பாடு செய்தோம்.

விழாக் காலங்களில் துணித் தேவை மிகுதியாக இருந்ததால் அப்பொழுதில் கூடுதல் வேலை செய்பவர்க்கு இரண்டு மணியளவு மட்டும் கூடுதல் வேலை செய்யவும் அப்பொழுதுக்குத் தனியே கூடுதல் சம்பளம் இரண்டு பங்காகத் தரவும் திட்டமிட்டோம். மிக வரவேற்புக் கிடைத்தது அவ்வகையில். ஞாயிறு விடுமுறை வழக்கமானது. ஆண்டுக்கு ஒருமுறை 15 நாள்கள் அவர்கள் விடுமுறை கொள்ளவும் விடுமுறைக்கும் சம்பளமும் கூடுதல் ஒருபங்குத் தொகையும் தந்தோம்.

கொஞ்சம் தாராளமாகப் பணம் வரவும் சிலர் குடிப்பதாக அறிந்தோம். ஒருநாள் அனைவரும் கூடி, வாய்ப்பை வளமாக்க வேண்டுமே அல்லாமல், குடி சூது எனக் கரியாக்கக் கூடாது. அப்படி மீறித் தொடர்ந்தால் கொடுக்கப்பட்ட சலுகைகளை நீக்கவும், அதற்கு மேலும் அந்நிலை மாறவில்லை என்றால் வேலையில் இருந்து விலக்கவும் ஒருமுகமாகத் தீர்மானித்து அனைவர் கையொப்பமும் பெற்றோம். **‘ஒழுங்கு நடவடிக்கைக் குழு’** என ஒரு குழுவும் அமைத்தோம்.

குடும்ப மருத்துவச் செலவு, குடும்பச் சடங்குச் செலவு முதலியவற்றில் ஒரு குறித்த பகுதியை வழங்குவது என இப்பொழுது **‘நிதிநிலைக்குழு’** என ஏற்படுத்தப்பட்டு அதன் ஆய்வில் உள்ளது. இந்த அளவு எங்களால் செய்யமுடிந்தது.

**நல்ல திட்டங்கள் செயல்கள் தாம். ஆனால், என்ன பயன் புலப்படுகிறது; பழைய நிலைதானா? மாற்றமுண்டா?**

**மாற்றமானால் நல்ல மாற்றம்!** நம் தொழிற்சாலை என்னும் எண்ணம் தொழில் புரிபவர்க்கு மட்டுமின்றி, குடும்பத்தவர் அனைவர்க்குமே ஏற்பட்டுள்ளது. எச்சிறு தவறும் ஏற்படாமல் தாங்கள் தாங்களே பார்த்துக் கொள்வதுடன் மற்றவர்களையும் பொறுப்பாகக் கண்காணித்துத் திருத்தம் செய்யும் நிலைமையும் உண்டாகியுள்ளது.

நல்லது; சிறியசிறிய நலங்கள், பெரியபெரிய பயன்களைச் செய்யும் என்பது என் பட்டறிவு. இனி, காலையில் பேசலாம். நான்

இரவு 8 மணிக்கு அப்படியே ஒருசுற்று கைவிளக்குடன் தொழிற் பண்ணையைப் பார்த்து வருவேன். அப்படியே காலை 6 மணிக்கும் ஒருமுறை சுற்றிப்பார்ப்பேன்; இது வாடிக்கை. நம் பேச்சால் வாடிக்கை தவறக் கூடாது அல்லவா! நீயும் ,வருவதானால் வரலாம். படுக்க வேண்டுமானால் படுத்துக் கொள்ளலாம்.

**இல்லை தாத்தா, உங்களோடு நடந்து வருகிறேன்.** காலையிலும் வருவேன். அரியவாய்ப்பு அல்லவா இது. "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்" என்று திருவள்ளுவர் சொன்னது நிலத்துக்கு மட்டுமில்லை! எடுத்துக் கொண்ட செயல்கள் எல்லாவற்றுக்கும் தானே!

நல்லதம்பி, "பயிர்பாராமல் கெட்டது; கடன் கேளாமல் கெட்டது" என்று மக்கள் வழங்குவது இத்திருக்குறளை நினைவூட்டவில்லையா?

**மக்களோடு மக்களாக வாழாமல் திருக்குறள் போலும் ஒப்புயர்விலா நூலை இயற்றியிருக்க முடியாதே தாத்தா!**

கிழவன் என்றது எத்தகைய அருமையான ஆட்சி!

**சொல்லுங்கள் தாத்தா!**

கிழவன் கிழத்தி என்றால் மணவுரிமை உடையவர். கிழமை என்பது உரிமை. ஞாயிற்றுக் கிழமை, திங்கள்கிழமை என்றும் நிலக்கிழார் பெருநிலக்கிழார் என்றும் சொல்கிறோம் அல்லவா! மனைவி மேல் காட்டும் உரிமையை நிலத்தின் மேலும் காட்டு என்பது தானே! நிலம் என்னும் நல்லாள் நகும் என்பதையும் நினைத்துப்பார்!

**அருமை தாத்தா! வள்ளுவத்தை இப்படி வாழ்வியலோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் சீர்மையும் சிறப்பும் விளங்கும்.**

நல்லதம்பி நான் இனி என்ன உடற்பயிற்சி செய்யமுடியும்! இந்த இரண்டு வேளை நடைப்பயிற்சி. உடல்நலப்பயிற்சியும் உளநலப் பயிற்சியும் ஆகின்றது அல்லவா! எட்டுமணிக்கு எல்லாரும் வீட்டுள் ஒடுங்கி விடுவர். ஆனால் அந்த வீட்டின்முன் சிலர் போகவர இருக்கின்றனர். வா! பார்க்கலாம்.

இருவரும் ஆங்குச் செல்கின்றனர். ஒரு குழந்தைக்குக் கடுமையான வயிற்று வலியாம். அதற்கான பரப்பரப்பு என அறிந்த பெரியவர், தம் சுற்றை அவ்வளவில் முடித்துக்கொண்டு பெற்றோர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வரச்சொல்லி, மருத்துவமனைக்குப்

போகின்றனர். மருத்துவர் ஆயா குடியிருப்பு அவ்விடமே ஆதலால், எப்பொழுதும் மருத்துவம் பார்க்கவாய்க்கும். "இதனை உடனே செய்ய வேண்டுவது தானே" என்றார். "ஒன்றும் பெரிதில்லை; சரியாகப் போகும்; காலையில் பார்க்கலாம்'' என்றிருந்தோம் என்றனர். ''பெரியவர்களுக்கு என்றாலும் உடனே மருத்துவம் பார்க்க வேண்டியிருக்க, குழந்தையை இப்படித் தவிக்க விடலாமா'' என்று சொல்லிக் கொண்டு மருத்துவ ஏற்பாடு செய்தார் பெரியவர்!

"நம் சுற்று வீண் சுற்று இல்லை" என்பதைப் பார்த்தாயா என்றார் பெரியவர். **இங்குள்ளவர்கள் எல்லாரும் ஒரே குடும்பத்தவர் என்று எண்ணும் எண்ணத்தின் விளைவு இது. இங்கே உள்ள திட்டம், கண்காணிப்பு, கவனிப்பு இருக்குமானால் அதுதான் வீடு பேற்று இன்பம்.**

தம்பி, நாம் படுக்கைக்குச் செல்லலாம்.

நல்லதம்பியும் பெரியவரும் ஓரே அறையில் தங்கினர். அமைவாக உறங்கி எழுந்தனர். காலைக் கடன்களை முடித்தனர். ஆறுமணி அளவில் காலைச் சுற்றுலாவைத் தொடங்கினர். **மாட்டுத் தொழுவப்பகுதி** சுறுசுறுப்பாக இயங்கியது. பால்கறவை, மோர் கடைதல், தூய்மைப்படுத்தல், தண்ணீர் குடிக்க விடுதல் என நிகழ்ந்தன. பார்த்துக்கொண்டே ஒரு சுற்று வந்தனர்.

**சமையல் கூடம்** பரப்பரப்பான வேலையில் இருந்தது. ஏழுமணி இருந்தே உணவுக்கு வந்து எட்டுமணியளவுக்குள் காலை உணவை முடித்துவிட்டு வேலைக்குப் போகவேண்டுமே! முதல்நாள் இரவே திட்டப்படுத்திய குடும்பத்தார் திட்டப்படுத்திய உணவை ஆக்கி முடிக்கவேண்டுமே! அதனால் சமையல் கூடம் முழுவீச்சில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. காலை 10 மணிக்கு நண்பகல் உணவு செய்வார் பொறுப்புக்கு வந்துவிடுவர். அதனால் ஒன்பது மணிக்கே காலை உணவுப் பணி நிறைந்துவிடும்.

தொழிலுக்குப் போகின்றவர், பள்ளிக்கும், பயிற்சிக்கும் போகின்றவர் எட்டு மணிக்குள் உணவை முடித்துப் போய்விடுவர். முதியவர்கள், ஆடுமாடுகளைப் பார்த்துக் கொள்பவர்கள் என இருப்போர் எட்டரை மணிக்குள் முடித்துவிடுவர். நடுப்பகல் உணவுக்கு ஆக்கவருவாரிடம் சமையலறையைத் தூய்மை செய்து ஒப்படைக்க வேண்டுமே! தனித்தனிச் சமையல் வேலை இல்லை என்பதை அறிவாய் அல்லவா!

**ஆமாம். மிக முதியவர், நோயர், சிறு குழந்தைகள் ஆகியோர்க்கு உரிய உணவை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்கள் இங்கே வந்து உண்ண வேண்டும் என்பதில்லை.**

அதுமட்டும் இல்லை. குடும்பமாக இருப்பவர் தம்குடும்பத்திற்கு வேண்டும் அளவு உணவுகளை எடுத்துக் கொண்டுபோய் வீட்டிலே எல்லோரும் அமர்ந்து கூடிக் கலந்து உண்பதும் உண்டு. தேவைக்குமேல் கொள்ளமுடியாத ஒன்று உணவு தானே.

ஆமாம். "ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய், இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாய்" என்பது இயற்கையின் கற்பிப்பு அல்லவா!

வரவேற்பகம் வந்தனர். அன்று புதிய செய்தி ஏதாவது உண்டா? எவரேனும் வர இருக்கிறார்களா? செல்ல இருக்கிறார்களா? குடும்பவிழாக்கள் ஏதாவது உண்டா? முதல்நாள் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்கவை ஏதேனும் உண்டா? என்பவற்றைப் பதிவேடுகளில் பார்த்தார் பெரியவர். 'ஒரு செய்தியைப் படித்துப் புன்முறுவல் செய்தார்! பதிவேட்டை மூடிவிட்டார் பெரியவர். (அதைக் கூர்ந்து கவனித்த தம்பி))

**தாத்தா! ஒரு செய்தியைப் படித்துப் புன்முறுவல் செய்தீர்கள்; ஒன்றும் சொல்லாமல் மூடிவிட்டீர்கள்!**

ஆம் நமக்கு நினைவு இல்லை என்றாலும் பழகிய அன்பர்களும், பழைய பதிவேடுகளும் நினைவூட்டத் தவறுவது இல்லை!

**அப்படி என்ன தாத்தா செய்தி?**

வேறொன்றும் இல்லை. நான் உன் பாட்டியை மணந்தநாள், வரும் வைகாசி ஒன்பதாம் நாளாம். பதினைந்து நாள்களுக்கு முன்னரே திருமணம், பிறந்தநாள் செய்திகளைப் பதிவு செய்து விடவேண்டும் என்பது எங்கள் திட்டம். அதை நான் செய்வது இல்லை. ஆனால் மறவாமல் அன்பர்கள் பதிவு செய்து விடுகின்றனர்.

**விழா எப்படி நடைபெறும் தாத்தா?**

பண்ணையின் சார்பிலே விழா நடைபெறும். பண்ணையின் பொறுப்பிலே புத்தாடை, மாலை, விருந்து நிகழும். வாழ்த்துப் பெறுபவர்களும் ஊரில் இருந்து சிலரும் வந்திருப்பர். எனக்கும் பாட்டிக்கும் மூத்தவர்கள் இங்கு எவரும் இலர். ஆதலால், வந்தவர்

அனைவரும் வாழ்த்துப் பெறுபவராகவே இருப்பர். விழாக்குழுவினர் திட்டப்படுத்தியபடி வரவேற்பு, வாழ்த்து, கலை நிகழ்ச்சி விருந்து என்பவை நிகழும்.

வரவேற்பாளராகப் பண்ணையில் இருப்பவர் அங்கு வரவேற்பார். குழந்தைகள் திருக்குறள் போற்றி சொல்வர். மகளிர் சிலர் வள்ளலார் பாடல் இசைப்பர். வாழ்த்துப் பெற விரும்புவார் அனைவரும் மேடைக்கு வந்து வரிசையாக வாழ்த்துப் பெறுவர்.

**வாழ்த்துப் பெறுவது எப்படி தாத்தா?**

வாழ்த்துபவர் இணையரோ ஒருவரோ எனினும் இங்கு இலர். வாழ்த்துப் பெறுபவர், வணங்கித் தலை தாழ்ந்து நிற்கத் தட்டத்தில் உள்ள பூவை எடுத்துத் தூவி வாழ்த்துவோம். வீழ்ந்து வணங்குதல் வேண்டா என்று விலக்கப்பட்டுள்ளது. எனினும் குழந்தைகள் சிலர் வீழ்ந்து வணங்கவே செய்வர். அதனை வலுக்கட்டாயமாகத் தடுக்க முடிவதில்லை. அது அவர்களுக்கு இன்பமும் நிறைவும் என்றால் தடுப்பானேன்! ஆனால், எதிர்பார்த்தல், போலிமை, சடங்கு என வளரவிடுதல் ஆகாது என்பதே எங்கள் திட்டம்.

**வாழ்த்துபவர் எவர் தாத்தா?**

மேடைக்கு வந்து வாழ்த்துப் பெறுபவர் முடிந்தபின், உடல்நலம் பேணல் பற்றி **மருத்துவர்** எடுத்துரைத்து வாழ்த்துவர்.

பள்ளித் **தலைமையாசிரியர்** பிள்ளைகளின் படிப்பு, தொழிற்பயிற்சி, இன்னும் பண்ணை செய்ய வேண்டியவை என்பவற்றை எடுத்துரைத்து வாழ்த்துவார்.

பண்ணைப் பொறுப்பாளர், தறிப்பகுதி, தொழுவப்பகுதி, தொழிற்பகுதிப் பொறுப்பாளர்கள் வாழ்த்துவர். இவர்கள் அன்றி ஊரில் இருந்து வந்தவர் சார்பில் ஒருவரும் வாழ்த்துவர். வாழ்த்தி நிறையும் போது ஒவ்வொருவரும் ஒரு பூவை வழங்கி வணங்கிச் செல்வர்.

பின்னர் ஆடவர், மகளிர், குழந்தைகள் நிகழ்ச்சிகள் என வெளியரங்க நிகழ்ச்சியாக நிகழும்.

**எல்லா நிகழ்ச்சிகளும் இப்படி நிகழுமா தாத்தா?**

இல்லை. மற்றை இடங்களில் பிறந்தநாள், நிறைந்த நாள் என நிகழ்வுகள் உண்டு. ஆனால் இங்கே எங்கள் ‘மணநாள்’ என்பது பெயரே ஒழிய, “நிறுவன விழா”வாக எடுப்பதால் இப்படி விரிவாக

நிகழும். மற்றையோர் விழாவுக்கும், குடும்ப விழாவுக்கும் நிறுவனக் குழுக்களின் தலைவர்கள், குறித்தவர்கள் இருப்பிடம் சென்று உடை முதலாம் பரிசு வழங்கிவருவர். இதுவும், நிறுவனவிழா என்பதால் தான் நாங்கள் ஒப்புக்கொண்டோம்.

**இன்றைக்குக் காலை உணவுக்குப் பின் மருத்துவமனை, பயிற்சிநிலையம், அங்காடி, பள்ளிக்கூடம், களரிப்பயிற்சி ஆயவற்றைப் பார்க்கவேண்டும் தாத்தா!**

அப்படியே செய்யலாம். பொழுதாகி விட்டது. அறைக்குச் சென்று பார்க்கவேண்டுவனவற்றைப் பார்த்துவிட்டுக் காலை உணவுக்குச் செல்லலாம்.

**உணவகத்தில் இருந்து இசை வருகிறதே தாத்தா!**

ஆம்! காலை உணவு தொடங்கும்போது குழந்தைகளும், சிறுவர்களும் 'திருக்குறள் போற்றி' சொல்வார்கள். அதனை அடுத்தே பெரியவர்கள் 'அருட்பா' சொல்வார்கள். பின்னர் தட்டங்களை எடுத்துக் கொண்டு உணவு கொள்வர்.

**விளம்பரப் பலகையில் இன்று 'முழுமதிநாள்' வழக்கம்போல் ஆடல்பாடல் நிகழும் என்றுளதே தாத்தா!**

பழங்காலத்தில் முழுமதிநாளில் தான் திருமணங்கள் நிகழ்ந்தன. அதனைக் கொண்டே திருமணம் 'முழுத்தம்' எனப்பட்டது. அதன் அடையாளம் தான் இன்றும் வளர்பிறையில் திருமணம் செய்வது!

**ஆமாம் தாத்தா! முழுமதி நாளில் இங்கு என்ன நிகழும்?**

அன்று மாலை ஐந்துமணிக்கே வேலைகள் எல்லாம் முடிந்துவிடும். ஆறுமணியளவில் சிறுவர்கள் ஆடல்பாடல் நிகழும். நம்முடைய கிளித்தட்டு, நொண்டி, குடட்டி (சடுகுடு) என்பவை நிகழும். பிறகு மகளிர் கும்மி, குடம் (கரகம்), கோலாட்டம் முதலியவை நிகழும். அதன்பின் காளையர்கள் வாலியர்கள் ஆட்டபாட்டங்கள். இறுதியில் முதியவர் கருத்தரங்கம், இசையரங்கம் என நிகழும் 10.30 மணியளவும் அன்று நிகழ்ச்சி உண்டு.

**அன்று இரவு உணவு எப்படி தாத்தா?**

உணவகத்தில் எப்படி உணவை வரிசையாக வைத்து விடுவார்களோ அப்படி உணவையும், தட்டுகளையும் வைத்துவிடுவார்கள். குழந்தைகள் முன்னாகவும், பிறகு முதியவர்களும், இறுதியில் பெண்களும், ஆண்களும் உணவை

எடுத்து வழக்கம் போல் உண்டு கழுவி வைத்துவிடுவர். நிலவுச்சோறு சாப்பிட்ட நிறைவு அதனால் உண்டாகும். கூடிக் கூடி உண்பது புறாக்கூட்டம் அமர்ந்து உண்பதை நினைவு படுத்தும். காற்று மழை நாளாக இருந்தால் உணவை உள்ளரங்கத்திலேயே முடித்துக் கொண்டு அங்கேயே நிகழ்ச்சிகளையும் நடத்துவோம்.

(உணவுக்குப் பின்னர் மருத்துவமனைக்குச் சென்றனர்.)

**மருத்துவர், மருத்துவி உள்ளனர்! மருத்துவத் -திற்காகக் காத்திருப்போரைக் காணவில்லையே தாத்தா!**

பெரும்பாலும் இங்குள்ளோர் நோயர் ஆகார். ஆவோர்க்கும் உடனுக்குடன் மருத்துவ வாய்ப்பு இருப்பதால் நோய் நீள்வதும் இல்லை. மக்கள் எண்ணிக்கையும் குறைவு தானே! எனினும் மருத்துவத் தேவை எப்படி உண்டாகும் என்று எவர் அறிவார்!

**இயற்கை மருத்துவம், சித்தமருத்துவம், ஆங்கில மருத்துவம், ஆயுர்வேதம் எனப்பல உளவே தாத்தா? இங்கே என்ன மருத்துவம் நடைபெறுகிறது?**

ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந் நாட்டுப்பருவநிலை, மண்நிலை, வாழ்வுநிலை என்பவற்றுக்கு ஏற்ப மருந்துகள் கண்டுளர். நம்நாட்டுப் பாட்டி மருத்துவம் சமயத்தில் நல்ல மருத்துவம் தான்! உள்ளுறுப்புகளை நாடி வழியே காண்பதிலும், கருவி வழியே கண்டு உரிய நிலையை ஆய்ந்து மருந்து தரும் ஆங்கில மருத்துவமும் வேண்டியே உள்ளது. குழந்தைகளுக்கு அமைவும் விருப்புமானது 'ஓமியோ' என்னும் ஒல்லியல் மருத்துவம். இயற்கை மருத்துவம் ஊறுபாடும் வேறுபாடும் ஆக்காதது. நோய்க்கும் மக்கள் நிலைக்கும் தகவேண்டும் மருத்துவத்தை இவர்கள் தரப் பழகியுள்ளார்கள். இன்ன மருத்துவம் என்ற பிடிவாதம் நாங்கள் காட்டுவதில்லை. **பின் விளைவு இல்லாமல் நோய் தீர்க்கும் மருத்துவமே உயர்ந்த மருத்துவம்.** நீ இன்னும் கூர்ந்து பார்க்கவில்லை என நினைக்கிறேன். உணவகத்தின் முன்னும், மருத்துவமனையின் முன்னும் ஓரே செய்தியுடைய பெரிய பலகை உள்ளது. திருக்குறள் 'மருந்து' அதிகாரம் அது. '**மருந்தென வேண்டா**' என்று தொடங்கும் அதிகாரம்!

**நல்ல செய்தி தாத்தா! உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு பேசி வந்ததால் நான் கூர்ந்து பக்கம் பார்க்கவில்லை.**

**ஈரிடங்களுக்கும் இன்றியமையாதது அவ்வதிகாரமே! அதுவே பலர்க்கு மருத்துவ முற்காப்பாக அமையும்.**

(பக்கத்தே பள்ளியைப் பார்க்கலாம்.)

**தாத்தா, இது பள்ளிக் கூடமா? தொழிலகமா?**

இரண்டுமே யாகிய இதனை பள்ளித் தொழிலகம் என்றோ, தொழிலகப் பள்ளி என்றோ வழங்கலாம். அறிவுக்கும் தொழிலுக்கும் பண்பட்ட வாழ்வுக்கும் தானே பள்ளிக்கூடம் போகிறோம். பண்பட்ட வாழ்வுக்கும் மானமாக வாழும் தொழிலுக்கும் உதவாத கல்வி கல்வியாகுமா? தம்பி, படித்தால் நிழலில் இருந்து அலுப்பில்லாமல் செய்யும் வேலையே வேலை அல்லது அலுவல் என்று நாட்டு நிலைமை ஏற்பட்டுவிட்டது.

உலக நலவாழ்வு பெரிதும் வெயிலே மழையே பனியே என்று பாராமல் உழைப்பவரையே சார்ந்துள்ளது. அதற்கு அடித்தளக் கல்வி தொழிற்கல்வியே. நேர்மையாக வாழ, கணக்கு வழக்கு எழுத வேண்டிய கல்வி, எண்ணும் எழுத்தும். அவையும் கற்பிக்கப் படுகின்றன. எத்தனை பொறிஞர் இருந்தாலும் பொறிகள் இருந்தாலும் உழைப்பவர் இல்லாமல் தொழில் நடைபெறுகிறதா, இல்லையே!

இங்கே செயல்முறைக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அக்கல்வி - கற்கும் வகை - கற்பிக்கும் வகை - கலை நுணுக்கம் ஆகியவை எல்லாம் எழுத்தாக்கமும் பெறுகின்றன. பாரேன் சிற்பம், நட்டுவம், இசை எல்லாம் பிறந்தமண் இது. இதில் அக்கலை நூல்கள் இருந்தன. அவற்றை வடமொழிப்படுத்தி மூலத்தமிழை ஒழித்தனர். கோபுரம் சிற்பம் தென்னகம் போல வடக்கே இல்லை. ஆனால் நூல் வடமொழியில். இக்கேடு தொடரக் கூடாது என்றே எழுத்தாக்கி வருகிறோம்.

**நல்லது தாத்தா! வியர்வை கொட்ட, அயர்வுண்டாக வேலை செய்பவர்க்கு உடல் வலுவுண்டு. நோயில்லை; பசியும் எடுக்கும். படுத்ததும் உறக்கம் வரும். ஒருவருக்கு ஒருவர் ஒட்டுறவும் ஏற்படும்.**

சரியாகச் சொன்னால் இப்பொழுது மூளை வளர்கிறது. வளர்க்கவும் படுகிறது. நெஞ்சம் சுருங்குகிறது; இல்லாமலும் போகிறது.

**தாத்தா பொறியே வாழ்வாக இருப்பவன் பொறியாகி விடுவது இயற்கை தானே! பொறிகள், உருவாக்கங்கள், கண்டுபிடிப்புகள், உடல் உளவளம் இல்லையானால் - இல்லாது ஆக்கப்படுமானால் கேடு செய்பவை தாமே!**

நல்லதம்பி, ஐம்பது அறுபது வயதில் வெள்ளெழுத்து, புரை வளர்ச்சி எனக் கண்ணாடி அணிவார்கள். இப்பொழுது பார், மூன்று நான்கு வயதுப் பிள்ளைகளே கண்ணாடி அணிய நேர்கின்றது. பத்தாண்டுகள் கணினி தொடர்ந்து காலவரம்பு இல்லாமல் செய்யும் இப்பொழுதைய நிலைமை எதிர்காலத்தில் எவரும் கண்ணாடி இல்லார் இல்லை என இருக்கச் செய்துவிடும்.

அடுத்திருப்பது ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்குரிய களரிப் பயிற்சி இடம். உழைப்பவர்களுக்கு உழைப்பே களரிப் பயிற்சி எனினும் நலத்தொடு கூடிய பயிற்சி ஆதலால் இதற்கும் இடம் தந்துள்ளோம். மருத்துவர் ஆணைப்படி நடப்பவர் ஓடுபவர் என்பவர்களைப் பார்! அவர் உடல் உழைப்பு இல்லாதவர்களாக இருப்பர். பண்பட்ட முதியவர்களுக்கு இவ்வோட்டம் நடை தேவை இல்லை. வீட்டுக் கடமைகள், கடைகள், சந்தை ஆயவற்றுக்கு நடந்து சென்று பொருள் வாங்குதல் இயன்ற அளவு தோட்ட வேலை செய்தல் என மேற்கொண்டால் அப்பயிற்சியே அவர்களுக்குப் போதும் அல்லவா!

**இல்லை தாத்தா! இப்பொழுது முதியவர்கள் பெரும்பாலும் சின்னத்திரை முன்னர் ஓரே கிடையாகக் கிடப்பதே வாழ்வாகி விட்டார். வீட்டில் என்ன பரப்பரப்பான வேலை நேரமாயினும், அதை அவர்கள் கண்டு கொள்வதே இல்லை. அதனால் சிலரைத் தவிரப் பலரும் வீட்டுக்கு ஒட்டாதவராகவே இருக்கின்றனர்.**

முதியவர்கள் குடும்பநிலை - சூழ்நிலை நெருக்கடி ஆயவற்றை எண்ணிப் பார்த்து இயன்ற அளவில் உதவாவிட்டால், முதியோர் இல்லத்தையும், ஏதிலியர் இல்லத்தையும் நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்கள் என்பது தான் பொருள்! இங்கே அரங்கத்தில் பொதுத் தொலைக்காட்சி உண்டு. தக்கதை மட்டுமே போடுவார்கள். பண்ணைப் பகுதியில் இருப்பவர் எல்லோரும் நாள் நடைமுறைச் செய்திகளை அறிய ஒலி பரப்பப்படும். நமக்குப் பயன்படும் செய்திகளைக் கரும்பலகையில் எல்லோரும் காணும் வகையில்

அரங்க முகப்பில் எழுதி வைத்துவிடுவர். ஊடகங்களில் வரும் பண்பாட்டுக் கேடுகளைக் கண்டிப்பாகப் பரப்ப யாரும் விரும்பமாட்டார்கள்!

**கண்ட உணவை எல்லாம் உண்டால் உடல் நலமாகுமா? வேண்டாத தீய செய்திகளை எல்லாம் கேட்டல் உளநலமாகுமா?**

**தாத்தா, அங்காடி அங்காடியாகவே** தோன்றவில்லை. அளவான - தேவையான பொருள்களே உள. பெருங்கூட்டமும் இல்லை. விற்பவரும் இல்லை. விலை மட்டும் எழுதிய அட்டை - அளவுக் கருவிகள் உள்ளன.

அப்பா, எடுத்தூண் போல்வது இது. வேண்டும் பொருளை எடுக்க - காசுபோடும் கல்லாவில் காசு போட! நம்பாமை தானே நாட்டு வாழ்க்கை! இங்கு நம்பாமைக்கு இடமில்லையே. அவர்கள் வளாகம் - கட்டுமான விலை. மீள வாங்கத்தொகை - அவ்வளவே வணிகம்! அவரவர்க்குரிய பொருளை எடுத்துக் கொள்ளல். எப்பொருளோ இல்லை, வேண்டத்தக்க பொருள் அது என்றால் குறிப்பேட்டில் பதிவு செய்வார்கள். அப்பொருள் வாங்கி வரப்படும். அதனால் ஒருவேளைக்குத் தட்டுப்பாடு!

மறுநாளைக்குத் தட்டுப்பாடு ஆகாது. நலக்கேடு ஆகிய பொருள் - வேதிப் பொருள் - வேண்டாப் புட்டிக்குடி, புகைக்குடி எவையும் இல்லை! அவைதாமே பெரிய அளவில் அங்காடிகளில் நிரம்பி வழிகின்றன! வீட்டுக்கு வேண்டும் பொருள் முதல் ஞாயிறன்று கட்டணம் இல்லாமல் ஆள் கணக்குக்குத் தக வழங்கப்பட்டு விடும். மேல் தேவைக்குத் தானே இங்கே வந்து பொருள் கொள்ள வேண்டும். ஆதலால் கூட்டம் நெருக்கடி இராது. ஈரப்பதமான எப்பொருளும் - கெட்டுப்போகும் பண்டங்களும் - இங்கே இரா. அங்கே தனியே பார்! பச்சையாக உண்ணும் பழம், காய், கிழங்குகள் உண்டு. அவை அன்றன்று தீர்ந்துவிடும். இல்லையானால் சமையலறைக்குப் போய்விடும். நுங்கு, இளநீர், பதநீர் என்பனவும் உண்டு.

பழைய பன்னாடை - வடிதட்டு நெய்யரி என்பவை **எல்லாம், வடிகட்டிய வழக்கம் தானே தாத்தா! நூலகத்திலும் ஆக்க நூல்களைத் தானே பொறுக்கு மணியாகத் தேர்ந்து வைத்துள்ளீர்கள்!**

நூலகம் குழந்தைகளுக்குப் பாலகம்; முதியவர்களுக்கு மேலகம்; அறிவறிய வேண்டிய ஆய்வாளர்களுக்குக் காலகம் (பலகணி).

**தொழிலே நடந்தால் தொழில்பேட்டை; உழவே நடந்தால் பண்ணை. இங்கே இரண்டும் நடப்பதால் தொழிற்பண்ணை என்று பெயரிட்டீர்களா தாத்தா!**

ஆம். அப்படித்தான். பழங்காலத்திலும் வள்ளல்கள் இருந்தார்கள். அவர்களே புலமையாளர்க்கும், கலைவல்லார்க்கும் பாதுகாவலராக. வள்ளல்களாக இருந்தார்கள். அப்புலமையாளர்களால் தான், அப்புரவலர்கள் வரலாறே நமக்குக் கிடைக்கிறது. இப்பொழுது காலம் மாறிவிட்டது. மன்னராட்சி போய், மக்களாட்சி வந்துவிட்டது. ஆள்பவரை வாக்கே தீர்மானிப்பதால், வாக்கைப் பெறுவதற்காகப் பலவகை இலவசங்களை வழங்குகின்றனர். அதற்குப் பணம் வேண்டுமே! அதற்காக அரசே மதுக்கடைக்களைத் திறந்து குடியைக் கெடுத்து, பணத்தை வாரிக் குவிக்கிறது. கல், மணல், கரி, எண்ணெய் முதலாம் வளங்களைச் சுரண்டுகிறது.

ஆண்டுக்கு இத்தனை நாள் என்னும் வேலையின் பெயரால், ஒப்பந்த வேலைப் பேரால் பாதிக்குப் பாதி கொள்ளையடிக்கிறது, அரசும் அரசுசார் கட்சிகளும் மாறிமாறிக் கொள்ளையடிக்கின்ற நிலைமை! அந்த நிலைமை இல்லாமல் எல்லாரும் நன்றாக வாழலாம் என்பதற்காகவே நாங்கள் திட்டமிட்டு இதனைத் தொடங்கினோம்! நாடு, பெருங்கடல்! இத்தொழிற் பண்ணையோ சிறிய ஊற்றுப் போல்வது. ஒவ்வோர் ஊரும் உணர்ந்து இவ்வாறு செய்தால் நாட்டில் விழிப்பு ஏற்படும். ஊழலை ஒழிக்க முயலலாம் என்ற ஆர்வத்தில் செயல்படுகிறோம்.

**நல்ல முயற்சி தாத்தா! ஆனால் எளிதில் நாடளாவப் பரவுமா?**

பரவலாம்; பரவக்காலமும் ஆகலாம்; உடனடியாகவும் ஏற்படலாம். தக்க ஒரு தலைமை உண்டாகி அத்தலைமைக்கு நாட்டு நலமன்றி வேறு தந்நலக் கருத்து இல்லை என்று தோன்றிவிட்டால் ஏன் உடனே ஆகாது. **காரல் மார்க்கசு** எழுதினார்! அவர் செய்ய வேண்டியதை அவர் எடுத்துக் கொண்டார். அவர் திட்டத்தை **இலெனினார்** உணர்ந்தார்! உருசிய நாட்டை ஒப்புரவு நாடாக்கி விடவில்லையா? அவரைப் போலவே தொடர்ந்திருந்தால் இன்றும் உலக எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து கொண்டிருக்கும்!

அக்கொள்கையில் சீனமும் பற்றுக் கொண்டது. நாட்டையும் உருவாக்கியது.

அண்டை நாட்டையெல்லாம் விழுங்குதலைக் கொள்கையாக்கிக் கொண்டது. கொள்கை அழிவுமட்டுமில்லை! அண்டைநாட்டுக்கு உதவுவதாய்க் காட்டி அழிமானமும் செய்கின்றது. நல்ல ஒப்புரவு அஃது ஆகுமா? உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவோம் என்று தொடங்கிய இயக்கத்தில் எத்தனை உடைவு! கொள்கை வாழ்வாகி விடாது! கொள்வார் இல்லையேல் கொள்கை என்பது வெறும் எழுத்துத்தான்! வாய்முழக்கம் தான்! தம்பி, பார்ப்பவை பார்த்துவிட்டோம்! பேசுவன பலவும் பேசிவிட்டோம். இன்னும் நீ கேட்க வேண்டியவை உண்டானால் கேட்கலாம். ஓய்வாக அமர்ந்து என்ன அறிய வேண்டுமோ அதைக் குறித்துவை. எனக்கு வேறுசில வேலைகள் உள்ளன.

**தாத்தா! நான் நூலகத்துக்குப் போய் ஓய்வறையில் இருந்து கேட்க விரும்பும் குறிப்புகளை எழுதுகிறேன்.**

நல்லது! அப்படியே செய்! தாத்தாவுக்கு ஏதோ வேலை என்றார்; இப்பொழுது புரிகிறது. யாரோ சிலர் அவரைப் பார்க்க வந்திருக்கிறார்கள். அவர்களிடம் கலந்து பேசுதலைத் தான் வேலை என்றிருக்கிறார். இந்தத் தொண்ணூறு வயதிலும் இருபது வயது இளைஞர் போல் செயல்படுகிறார். அவர் உடல் - உள - உணவு - வாகுகள் ஒத்து இயங்குவதால், முதுமையை வென்றெடுக்கின்றார்! இன்னொன்று இந்த இளமையிலேயே எனக்குப் படுத்தஉடன் உறக்கம் வருவது இல்லை. அவரானால் படுத்ததும் குழந்தை போல் உறங்கிவிடுகிறார். முதுமையில் அப்பேறு வாய்த்தார் பெரும்பேறு பெற்றவரே!

(நல்லதம்பி நூலகம் சார்ந்த ஓய்வறைக்குப் போனான்! அமர்ந்து சிந்தித்தான்! எழுதவும் தொடங்கினான். இரண்டுமணி நேரம் கழித்துப் பெரியவர் வந்தார்)

அரசு என்பது மக்களுக்கு நலம் செய்ய அமைக்கப்பட்டது. மக்களாட்சி என்பதோ மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் மக்கள் நலம் கருதி ஆள்வதற்கு உறுதியளித்து அமைச்சுக் கட்டில் ஏறியவர்கள். அவர்கள் நேர்மையாக ஆள்கிறார்களா என்பதற்கும் மக்கள் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கிறார்களா என்பதற்கும் முறைமன்றம் உள்ளது.

ஆனாலும் காக்க வேண்டிய அரசு மக்களை வலிந்து கெடுக்கிறது என்று சொல்லிக் கொண்டே வந்தார் பெரியவர்.

**என்ன தாத்தா நிகழ்ந்தது!**

நம் ஊரை ஒட்டிய ஓர் ஊர்; **குன்றக்குடி;** அனைவரும் உழவர் குடியினர்; கூலி வேலையர்; தச்சு கொல்லு வேலைக்குக் கூட அங்குப் பட்டடை இல்லை. முடிதிருத்தகம், சலவையர் என்பாரும் இல்லை. அடுத்துள்ள ஊரைத் தான் தேட வேண்டும். ஏறக்குறைய 30, 40 வீடுகளை உடையது. அரசுப் பள்ளியோ, தனியார் பள்ளியோ கூட இல்லை. இந்நிலையில் அரசு 'மதுக்கடை' திறக்க முயல்கிறதாம்.

ஊரில் இரண்டு மூன்று இனத்தவர்கள் இருந்தாலும் தாயாய்ப் பிள்ளையாய் வாழ்பவர்கள். கட்சி, அரசியல் இல்லாதவர்கள். ஊரில் சிறு கடைகள் இரண்டு உண்டு. அவற்றில் புகையிலை, பீடி, சுருட்டு வகை எதுவும் விற்கக் கூடாது என்னும் கட்டொழுங்கு உண்டு. அப்படியிருக்க அரசு மதுக்கடை திறந்தால் குன்றக்குடி நிலை என்னாகும்? ஊர் மடம் கிழக்குப் பக்கம் ஊரை விட்டுத் தனியே உள்ளது. அங்கே ஊர்க் கூட்டம் போட்டிருக்கிறார்கள். ஊர்ப் பெரியவர் பெண்கள், ஆண்கள், பிள்ளைகள் எனக் கூடி இருக்கிறார்கள்.

ஊரில் யாரும் மதுக்கடைக்கு வாடகை இடமோ, காலி இடமோ தருதல் ஆகாது. ஊர் எல்லை கடந்த புறம்போக்கு ஆற்றங்கரையில் மதுக்கடை வைத்தாலும் ஒருவர் கூட அங்கே மது வாங்கவோ, அருந்தவோ கூடாது எனப் பாலில் உண்மை (சத்தியம்) வாங்கி இருக்கிறார்கள்! என்ன கொடுமை? வேண்டிய பள்ளி இல்லை! வேற்றூர்க்குப் போக வேண்டும். குடிகெடுக்கும் குடிமட்டும் அரசு தேடிவந்து தருமாம்! அதைச் சொல்ல வந்தார்கள்! கட்டோடு நில்லுங்கள்! ஊரே ஒன்றுபட்டு நின்றால் எவரும் எதுவும் செய்யமுடியாது! அடுத்த ஊரில் குடித்துவிட்டு வந்தாலும் மிதியாக மிதிக்கும் ஊரில் மதுக்கடை திறக்கப் போகிறார்களாம்! துணிவாக நில்லுங்கள்! நாங்கள் முழுத் துணையாக நிற்போம் என்று சொல்லி அனுப்பிவிட்டு வந்தேன்.

**நாட்டையே பிச்சைக்கார நாடாகவும் மானங்கெட்ட நாடாகவும் ஆக்கிக் கெடுக்கும் அரசுக்குப் பேர் மக்கள் நல அரசாம்!**

செய்தித்தாளில் பார்த்தேன். தாத்தா, தரக்கேடான வாழ்வுடைய நாடுகளில் 136 ஆம் இடத்தில் இருக்கிறதாம் நம்நாடு! உலகக் கணக்கெடுப்பு இது.

சரிதான், உன் உணவை முடித்துவிட்டு இங்கேயே வந்திரு. நான் இன்று செய்ய வேண்டிய வேலைகள் எவை என்பதை அறிந்து கொண்டு என் உணவை முடித்து விட்டு மீள வருகிறேன்.

**சரி தாத்தா! அப்படியே செய்யுங்கள்.**

(பெரியவர் வேலையை முடித்துக் கொண்டு வந்தார்; தம்பி எதிர்நோக்கி இருந்தான்; கொஞ்சம் வெயில் இருந்தது; மோர் வந்தது; இருவரும் பருகினர்.)

**தாத்தா, நாம் இங்கே மோர் பருகுகிறோம்; தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு என்ன ஏதாவது குடிப்புக்கு உண்டா?**

தம்பி, ஒவ்வொரு பகுதியிலும் மூன்று மண்பானைகள், குவளைகள் இருக்கும். ஒன்றில் குளிர் நீர்; மற்றொன்றில் மோர்; இன்னொன்றில் நாட்டு வெல்லம் கலந்த இலாமிச்சைச் சாறு! வேண்டுவார் வேண்டிய போது வேண்டியதைப் பருகலாம்.

**தாத்தா இறைநிலை இதுதான் தாத்தா!**

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

என்பது இறைமையர் தெளிவு அல்லவா!

தம்பி சிலர்க்குக் குளிர்ச்சி பிடிக்காது; அவர்களுக்கு மல்லி, சுக்கு, மிளகு கலந்த இனிய வெப்பமான குடிப்பு ஒரு வெதுப்புக் கலத்தில் வைக்கப் பட்டிருக்கும்.

**நல்லது தாத்தா! இங்கு இருப்பவர்களுக்கு ஓரிடத்து அடங்கிக் கிடக்கிறோம்; வெளியுலகத் தொடர்பில்லை என்ற எண்ணம் வராதா, தாத்தா?**

அப்படி வருமானால் இங்கு வந்தவருள் எவராவது ஓடிப் போயிருப்பாரே! சிறையில் இருந்து தப்பிப் போக என்னென்ன முயற்சி செய்கின்றனர்? இங்கே அப்படி எதுவும் நேர்ந்த தில்லையே! இங்கே கோட்டை மதிலோ, அகழியோ, துமிக்கி (துப்பாக்கி) ஏந்திய காவலரோ இல்லையே! எவராவது கலகலப்பில்லாமல் இருக்கப் பார்த்தாயா?

**இல்லை தாத்தா? இந்த இயற்கை நலவின்பம் எப்படி ஏற்பட்டது? அல்லது ஏற்படுத்தினீர்கள்?**

ஏற்படவும் இல்லை! ஏற்படுத்தவும் இல்லை! இயல்பாக அவர்களுக்கு உலகம் உறவு ஊர் கற்பித்துத் தர, கற்றுக் கொண்ட பாடம்! பசிக்கும், பட்டுணிக்கும், மானக்கேட்டுக்கும், பழிக்கும், இழப்புக்கும் ஆட்பட்டவர்கள் இவர்கள்; தனித்தனி வரலாறு உள்ளடங்கிக் கிடக்கிறது!

ஒரு முதியவர்; நல்ல உழைப்பாளர்; பொய்களவு அறியாதவர்; கணவனை இழந்தவர்; மகப்பேறு அற்றவர்; உன்னைப் பார்க்க யார் இருக்கிறார்கள்? செத்தால் எடுத்துப் போடுவார் யார்? உன் வீட்டை எழுதித்தா! நாங்கள் கண்ணே பொன்னே எனப் பார்த்துக் கொள்வோம் என்று ஏமாற்றி படிப்பறிவில்லா அவரைக் கீறல் வைக்கச் செய்து வீட்டைப் பறித்துக் கொண்டு ஒரு மாத அளவுக்குள் வீட்டை விட்டு ஓட்டிவிட்டால், அவர் உள்ளம் எப்படி வேகும்?

அந்த உறவில்லை! இந்த உறவாவது உதவும்! என்று வேறோர் ஊர் சென்று உறவுடன் ஒன்றி நாளைக்கு நூறு ரூவா சம்பள வேலை செய்து அதனால் உணவு கொண்டு இருக்கும்போது, நோயில் ஒருநாள் படுத்துவிட மருத்துவத்திற்குக் காசில்லை என்று சொல்லிக் காதுத்தோட்டை அடைவு வைத்து மருந்து வாங்கித் தந்து, கைவளையலையும் தங்கள் தேவைக்குப் பறித்துக் கொண்டால் வெந்த புண்ணில் வேல்பாய்ந்ததல்லவா!

அவர்க்கு உணவு, உடை, உறைவு, மருந்து, மனங்கலந்த உறவு எல்லாம் கூடினால் விட்டுப் போவாரா? வீடுபேறு அதுதானே!

பிச்சைக்குப் போனவன் எத்தனைபேர் பழிக்கு ஆட்பட்டிருப்பான். படித்து வேலை இல்லாமல் தண்டச் சோறு எனப்பட்டவன் எவ்வளவு நொந்திருப்பான்! அடைமழைக்கும் ஒதுங்க இடமில்லாதவனுக்கு எக்குறையும் இல்லாவாழ்வு வாய்க்கும்போது இன்ப உலகம் இதுவாகத் தோன்றாதா?

பழங்காலத்தில் பிழைப்புத்தேடி வேற்றூர் போகாமை பெருமையாகப் பேசப்பட்டது; 'பதியெழுஉ அறியாப் பழங்குடி' எனப்பட்டயம் தீட்டவும் கொண்ட ஊர்களும் உண்டு. அப்பொழுது அவர்களுக்குப் 'புத்தேளிர் உலகு' என ஒன்று உண்டு என்றும், அது தங்கள் நாடு என்றும், இங்குப் பிழைக்க வந்தவர்கள் - அங்குப் பிழைக்க வழியற்று வந்தவர்கள் - சொல்லியது வள்ளுவர் காலத்திலேயே ஏற்பட்டு விட்டது. அதற்கு ஏமாந்து இருந்த வீட்டையும் குடிமையையும் பாழாக்கிக் கொண்டவர்களும் உண்டு. ஆனால் இங்கு அந்நிலை இதுவரை ஏற்படவில்லை.

**அப்படி ஏற்பட நேருமானால்?**

தம்பி எதுவும் ஏற்படலாம்; ஏற்படாது எனச் சொல்ல முடியாது. அப்படி இங்கே உள்ளவற்றினும் அங்கே பசுமையென ஓடும், வெள்ளையாட்டு உள்ளத்தவர் இருக்கிறார் எனத் தெரிந்தால் அவரை வழியனுப்ப வாயிலில் தடை எதுவும் இல்லை! மீண்டும் வரமட்டும் கட்டாயம் உரிமை இல்லை! அவ்வுரிமை தந்தால் பலப்பல கேடுகள் ஏற்படல் உறுதி.

**குழந்தை குட்டிகள் பெருகினால் இத்தொழிலகமும் பண்ணையும் போதாவே தாத்தா!**

பெருகத் தான் செய்யும்! அதற்குத் தகப் பெருக்கத்தான் வேண்டும். அது நல்லதே! இன்றே ஓர் நல்ல அடையாளம் தோன்றவில்லையா?

எங்களூரில் 'மதுக்கடை' திறக்கக் கூடாது என்ற பக்கத்தூராரை நினை! அவர்களோடு நாம் இணைந்து அல்லது இணைத்துப் பெருக்கிக் கொள்ள வேண்டும் தானே!

**'இடம் சிறிது என்னும் ஊக்கம் தூண்ட'**

வேந்தன் படையெடுத்தது சங்கக்காலம்!

**தாத்தா! மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்** என்றும்,

**வினையின் நீங்கி விளங்கிய அறிவன்'** என்றும், **நம்மவர் கண்ட அறிவராக என் தாத்தா இருப்பதை எண்ணினால் உச்சி முதல் உள்ளங்கால் வரை வாயாக வாழ்த்தவேண்டும் என்னும் இறைமையர் உள்ளமே என்னுள் நிறைகிறது தாத்தா!**

நல்லதம்பி, நீ பெரியபெரிய சான்றுகளைச் சொல்கிறாய். அவற்றைக் கற்றிருக்கிறாய் என்பதை அறிந்து மகிழ்கிறேன். என்னைப் பொறுத்த அளவில், 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்னும் ஔவையார் மொழியும், நீங்கள் எத்தகு அறிவர் என்றவர்க்கு ஓர் இலையைப் பறித்து என் கையில் இருப்பது ஓர் இலை. இந்த மரத்தில் எத்தனை இலைகள்! இப்படி மரங்கள் உலகில் எத்தனை? என்ற புத்தர் மொழியுமே உள்ளுள் ஒளி செய்கின்றன.

**இங்கே காதல் மணம் நிகழ உரிமை உண்டா?**

உரிமை என்ன? இங்கே நிகழும் திருமணங்கள் எல்லாமும் காதல் மணங்களே தான்! அது, இயற்கை தானே வழங்கிய கொடை!

இங்கிருப்பவர் எவரும் ஓரினத்தார், ஒரு குடியார், ஒரு சமயத்தார் அல்லர். இங்கு வருமுன் ஒருவரை ஒருவர் அறியார்; உறவினரும் அல்லர். ஓரிருவர் நட்பினராக இருந்திருக்கலாம். ஆதலால் எந்த மணமும் குலம் பாராத் திருமணமே யாம். எத்திருமணமும் அகமணம் (ஒன்றுக்குள் ஒன்று செய்யும் திருமணம்) ஆகாது. எல்லாமும் புறமணமே யாம்.

ஒருவன் ஒருத்தியை விரும்பினால் ஒருவருக்கும் தெரியாமல் போக முடியாது. உள்ளார்ந்த அன்பால் இயற்கைத் தூண்டலால் எவர் மீதாவது விருப்பு உண்டாகிக் காதல் ஏற்பட்டால் அதனை அவ்வக் குழுத் தலைவர்க்கு அறிவிக்க வேண்டும். அவர் இருவரையும் நேரில் கேட்டும், தனித்து ஆய்ந்தும் தொழிற்பண்ணை ஆயத்தின் முன் வைப்பார். ஆயம் அவர்களைத் தனித்தனியும் இணைந்தும் கலந்து உரையாடும். ஆயத்திற்கு அவர்கள் காதல் தக்கதே என்று தோன்றின் முழுத்த நாள் பார்த்து ஆயமே திருமணமும் நடத்தித் தனிக்குடித்தனம் செய்யவும் ஒப்பும். ஒரு பக்கக் காதல், ஏதோ ஒரு நேர்ச்சியால் காதல் என்னின் ஆயம் ஒப்புக் கொள்ளாது. இங்கே ஐந்தாறு திருமணங்கள் நடைபெற்றுள்ளன. அவையெல்லாம் வெற்றியானவை யாகவே அமைந்துள்ளன.

**வள்ளலார் ஒப்புரவுத் தொழிற்பண்ணை என்பதால் இங்கே புலவூண் இல்லை என்றே நினைக்கிறேன்.**

சரிதான்! நீயே புரிந்து கொண்டது நல்லது. அப்படியானால் இப்பெயரை வைத்து அப்பெருமகனார் பெயரைக் கெடுப்பதற்காக அமைந்ததாகத் தானே இருக்கும்!

சேரலத்திலே **தட்டாம்படி** என்றோர் சிற்றூர். அங்கே சிவானந்தா என்னும் ஒருவர். **திருவள்ளுவர் ஞானமடம்** வைத்திருக்கிறார். அம்மடம் சார்ந்தவர்கள் மேட்டுக்குடியரும் அல்லர்; மேல் சாதியர் என்பாரும் அல்லர். பெரும்பாலும் சிச்சிறு நிலத்தர். கூலி வேலையர். வழிபாடு, திருமணம், வழக்கு எல்லாமும் மடத்திலே தான் நிகழும். நாற்பதுக்கு மேற்பட்ட மடங்களும், 120 -க்கு மேற்பட்ட பிரிவினர்களும் ஒன்றுபடுத்தப்பட்ட உயரிய அமைப்பு. அம்மடம் சார்ந்தவர் குடிப்பது இல்லை; புலவு கொள்வதும் இல்லை. திருக்குறளை மலையாள மொழியில் படித்த ஒருவர் செயற்பாடு இது. திருக்குறள் பிறந்த மண்ணினர் நாம்! நம்மிடம் தெளிவு உறுதி செயல் திறம் இல்லை!

**நம் உணவு உடை தொழில் முதலியவற்றுக்கு வேண்டுவ எல்லாமும் நாமே உண்டாக்கி விட முடியாதே! வெளியே வாங்கத்தானே வேண்டும்.**

ஆம் வாங்கத்தான் வேண்டும். நாம் உண்டாக்கும் துணிகள் உள்ளன; நம் தேவைக்கு மேல் உணவுப்பொருள்கள், பழங்கள், காய்கறிகள் உள்ளன. ஆடுமாடுகள் பெருகுகின்றன. இவற்றுள் நம் தேவைக்கு வேண்டியவை போக மற்றவற்றை விற்று, நம் தேவைக்கு வேண்டியவற்றை வாங்க வேண்டியது தான்!

வாழ்க்கையை எப்படி எளிமைப் படுத்தினாலும் நானில வளமும் தேவையாகவே உள்ளன. உப்பு நமக்கு வேண்டும். மிளகு, சீரகம், மஞ்சள், மல்லி முதலியனவும் வேண்டும். நாம் முயன்று உண்டாக்கினாலும் எல்லாவற்றையும் உண்டாக்கி விட முடியாது. இரும்பு, கன்மா, கலவகைகள் வேண்டியுள. ஆதலால் நம்மிடம் உள்ள மிகுதியான பொருளைத் தந்து, தேவையான பொருளை வாங்கத் தான்வேண்டும். போக்குவரத்து, அஞ்சல் முதலியவற்றுக்கு வெளிப் பயன்பாடு இல்லாமல் முடியாது. பண்ணையின் பேரால் பதிவு செய்தாலும், நிலவரி அரசுக்குக் கட்டியாக வேண்டும்.

**அறிவியல், பொறியியல், தொழிற்புரட்சி என்னும் இக்காலத்தை விட்டு முந்தைக் காலத்திற்குப் போவதாக அமையாதா தாத்தா?**

வாழ்க்கை வாழவா? கெட்டொழியவா?

வாழ வைக்கவா? கெடுத் தொழிக்கவா?

அமைதியும் கேடும் ஆக்கக்கேடும் மிக்க மூளையர் முதலையர் வாழ்வுக்கா?

குடும்பத்திலேயே எட்ட முடியா வகையில் அமைந்த வஞ்ச நஞ்ச ஏமாற்று உலகை ஒழித்து, அமைதி நிறைவு மிக்க உலகை ஏற்படுத்துவதற்கா?

**"ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல"**

என்றாரே வள்ளுவர்! அந்த உலகம் தேவையா,

**"ஒன்றன் கூறாடை உடுப்பவர் ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"**

என்னும் வாழ்க்கை தேவையா?

ஐந்து ஆறு எனப் பாதுகாப்பு வளையத்துள் வாழ்ந்தால் தான் முடியும் என்பதா?

**“மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும்பயனே”**

என்று உலவி வாழமுடியும் என்பதா?

மூளையர் கூடிய வாழ்வினும் நெஞ்சர் கூடிய வாழ்வே வாழ்வு என்பதை உணர்த்தவாவது தொழிற்பண்ணை உதவுமே! ஏனெனில் நன்னெஞ்சர் ஒரு நூற்றுவரையும் மிகக் கேடான மூளையர் ஒருவர் கெடுத்து விடுதல் கண்கண்ட காட்சி அல்லவா!

**நூறுநாள் நூற்றைம்பது நாள் வேலைத்திட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் தாத்தா.**

கொடுப்பதைத் தடுக்க - நிறுத்த - நான் சொல்லவில்லை. ஆனால், நெல்லுக்கு இறைத்தநீர் புல்லுக்குப் போக வேண்டா என்கிறேன். உரியதொகை சுரண்டல் இல்லாமல் உரியவரை அடையவேண்டும். உழைப்பவர், ஏய்ப்பவராக இல்லாமல் உழைக்கவும் வேண்டும்.

நாடெல்லாம் நிலத்தைப் பாழாக்கும் வேலிக் கருவேலை முழுவதாக அழித்தல் கட்டாயக் கடன். இத்திட்டத்தை அதற்குச் செம்மையாகப் பயன்படுத்தலாம். தூர்ந்த ஏரிகளையும், வாய்க்கால்களையும் அகழ்ந்து பயன்பாட்டுக்குக் கொண்டு வரலாம். வறுநிலமாகக் கிடப்பவற்றிலும் புறம்போக்கிலும் ஆற்றங்கரை ஏரிக்கரை ஆயவற்றிலும் மரங்களை நட்டு மரவளம் பெருக்கலாம். வழித்தடம் இல்லாத சிற்றூர்களின் பாதை, தெரு ஆயவற்றில் ஆக்கப்பணி புரியலாம். கள்ளி, கற்றாழை மிக்க இடங்களில் பசுந்தாள் உரமாம் கொழுஞ்சி, ஆவிரை ஆயவற்றை உண்டாக்கலாம். மலையடிவார மண்ணைப் படிப்படியாக அகல விரித்து வானவாரிப் பயிர்க்குப் பயன்படுத்தலாம். செய்ய நினைத்தால் இன்னும் எத்தனையோ திட்டங்கள் காணலாம்.

**அரசுத் துறைகளில் என்ன என்ன மாற்றங்கள் வேண்டும் என்று நினைக்கிறீர்கள் தாத்தா?**

நீ சரியாகவே வினாவினாய்! நினைப்பதைத் தானே கேட்கிறாய்! ஆட்சியில் ஏறியவர்கள் விண்ணில் இருந்து வந்ததாக நாணமில்லாமல் நினைக்கின்ற நாட்டில், கிழவன் சொல்லைக் கின்னரிக் காரன் கேட்பானா என்று சொல்லத்தான் தோன்றுகிறது. ஆனாலும்

ஒன்றிரண்டைச் சொல்கிறேன். புதியபுதிய உருவாக்கம் வரவரப் பழையவை காட்சியில் வைத்துக் காக்கப்படுவது நாகரிக நாடுகளில் காணும் காட்சி.

அவ்வாறே, அஞ்சல்துறையை எடுத்துக்கொள்! அட்டை, உறை, அஞ்சல்தலை, பணவிடைப் படிவம் ஆகியவையே இல்லாத அஞ்சலகங்கள்! ஒரு திங்கள் கழித்தும் போய்ச் சேரும் உள்ளூர் அஞ்சல்கள்! எப்பொழுது திறந்திருக்கும், எப்பொழுது மூடியிருக்கும் என்பது தெரியாத சிற்றூர் அஞ்சலகம். எத்தனை நாள்களுக்கு ஒருமுறை வரும் என அறிய வராத அஞ்சலும், அஞ்சல்காரரும்! இதனால் என்ன என்கிறாயா? தனியார் தூதஞ்சல்கள் முழுதுற ஆட்சி நடத்துகின்றன! அதற்கு வாய்ப்பாக்கி வழங்குகிறது அரசுத்துறை. இனி மின்துறை உண்டு. சரியாக ஆள் வருவது ஒருநாள்! மின் கணக்கெடுத்து அட்டையில் பதிய! எத்தனை நாள் மின் இல்லை என்றாலும், எத்தனை முறை எழுதிவைத்தாலும் ஏறிடாத ஏறுகள்! அதனால் என்ன என்கிறாயா? உள்ளூரில் யாராவது - துறை சாராத ஒருவர் - வேண்டியது செய்ய வேண்டி அவரைத் தேடி அலைந்து அவர் தேவையை நிறைவு செய்து சேவை பெறுவது!

பாரேன் ஐம்பது கல் தொலைவு ஊர்! உருவா இருபது முதல் இருபத்திரண்டு பேருந்துக் கட்டணம். அது தனியார் பேருந்து! அதே தொலைவு 30 முதல் 45 கட்டணம். அது அரசுப் பேருந்து. பெயர் மட்டும் விரைவு, மிக விரைவு, குளிருந்து, புறவழியுந்து போகும் நேரம் ஒன்றும் மாற்றம் இல்லை! இதனால் என்ன என்கிறாயா?

தனியார் பேருந்து ஐந்தாம் ஆறாம் இடத்தில் நின்றாலும் நிற்கவும் இடமின்றி ஆள்! இருக்கை நிற்பு தொங்கல் என நூற்றுக்கு மேல்! அரசுப் பேருந்து முதலிடத்து நின்றாலும் ஐந்து அல்லது பத்துப் பேர்கள்? இழப்பை ஏற்படுத்துவது எவர்? தனியார் வரவை ஊக்குபவர் எவர்? இப்படி இன்னும் என்னென்ன சொல்வது?

**தாத்தா இலவசம் உழைப்புக்கேடு - மானக் கேடு என்கிறீர்கள்? இலவசமே வேண்டியதில்லையா?**

அப்படிச் சொல்லவில்லையே! தொடக்கக்கல்வி முதல் கல்வி இலவசம் தர வேண்டும். மருத்துவம் இலவசம் வேண்டும். மூன்றாவது அவரவர் தகுதிக்குத் தக்க வேலை வாய்ப்புத் தரவேண்டும்.

இவற்றைத் தந்தால் அவரவர் பாட்டை அவரவர்களே பார்த்துக் கொள்வார்கள்.

**வேறு ஏதாவது சொல்ல நினைக்கிறீர்களா தாத்தா?**

எத்தனையோ நினைக்கிறேன். ஒன்றைச் சொல்கிறேன். இந்நாடு உழவை நம்பி வாழும் நாடு! ஆனால் உழுநிலம் பெரும்பாலும் நெடுஞ்சாலைப் பக்கமெல்லாம் வீட்டடி மனைகளாக வேலிபோடப்பட்டு விட்டன. மலைவளப் பகுதிகளைச் சுற்றிச்சுற்றி ஊர்கள் உண்டாகி விட்டமை மாறி, உச்சி வரை போய்விட்டன! ஆறு அருவியாகிய இயற்கை தனியார் உடைமையாகி விட்டன. காடழிப்புக்கு எல்லையே இல்லை. கான் விலங்குகளைக் காட்சிச் சாலைகளில் தான் காண முடியும் என்னும் நிலைமையாகி விட்டது. மணல் கொள்ளை, கல் கொள்ளை, கரிக்கொள்ளை, கனிமக் கொள்ளை என எல்லை இல்லை!

**அச்சமாக இருக்கிறது தாத்தா?**

அச்சப்பட என்ன இருக்கிறது? இப்பொழுது அறவர், அருளர், சான்றோர் நடமாட முடியாத நிலை! வருநாளில் ஆள்களென எவருமே நடமாட்டமில்லாத பழங்கற்கால நிலை! தம்பி, உன் இளமை என்னென்னவோ கேட்க ஏவுகிறது. ஆனால் என் முதுமை, கரட்டு நிலத்தில் கார்ச்சம்பா விதைப்பதாகத் தோன்றுகிறது. ஆனாலும், **சிந்தனையைச் சிறைப்படுத்துவது கோழைத்தனம்** என்பதால், சில சொன்னேன். இன்னும் என்னென்னவோ சொல்ல வேண்டும் போல் உள்ளது!

**அப்படி ஏதாவது சொல்ல இருந்தால் சொல்லுங்கள் தாத்தா!**

இந்த இலவசம் ஏமாற்று குடிகெடுப்பு பண்பாட்டுச் சிதைவு - மானக்கேடு முதலியவற்றின் மூலம் மதுவை அரசே வழங்குதல். கள்ளத்தனமாக மதுக்காய்ச்ச அரசியல் கட்சிகளே மூலமாக இருத்தல் ஆகும். அதை ஒழிக்க வேண்டும் என்று தனிப் போராட்டம் நடத்த நாணயமான - நாட்டுநலம் கருதிய கட்சிகளாவது ஒன்றுபட்டு நிற்கவேண்டும். மதுவை ஒழித்தால் இலவசம் தரமுடியாதே - மக்கள் சிந்திக்கத் தொடங்குவரே - மீளவும் ஆட்சிக்கு வரமுடியாதே என்பது ஆள்பவர் கரவான நெஞ்சம்! வீடு கெட்டால் என்ன, நாடு கெட்டால் என்ன நமக்கு இன்று கிடைக்கும் இலவசமே இன்ப உலகம் என்னும் பேதையர்க்கு இக்குடியும் இலவசமும்

புலப்படா! பழநாளில் ஒருவன் சொன்னான், மயிலை வளர்க்கிறேன் என்று அதன் கொண்டையை அறுத்து அதன் வாயில் ஊட்டினான் என்று! அப்படிப்பட்ட கேட்டை இலவச ஆலாப் பறவைகளாகத் திரியும் அறிவறியா மக்கள் உணர, மீளவும் மதுவொழிப்புப் போராட்டம் வேண்டும். கொள்ளையடித்துக் குவித்தவன் வெளிநாட்டு வைப்பகத்தில் பதுக்கியவன் - பணத்தைப் பறிமுதல் செய்தால், மது வருவாயினும் பத்து மடங்கு வருவாய் கிட்டும். அதற்கு நேர்மையும் துணிவும் மிக்க தலைமை உருவாக வேண்டும். காலம் தான் அதற்குப் பதில் சொல்லவேண்டும்.

**தாத்தா இது தொழிற்பண்ணை! தொழிற்பேட்டை இல்லை! ஆதலால் உங்கள் தாய்மொழிக் கொள்கைக் கருத்து என்ன?**

ஒன்றைக் கேட்கவில்லையே நீ என நினைத்தேன். அதையும் கேட்டு விட்டாய்! கேள்.

இந்தியா ஒரு தேயம்; இன்னும் சொன்னால் ஒரு துணைக்கண்டம். இக்கண்டத்தில் உலக முதன் மொழியும், அதன் வழிமொழிகளும் கால்வழிகளும் உண்டு. அவ்வாறாகவும் மிகப் பிற்பட்டதும் தனக்கெனத் தனித்தன்மை அற்றதுமாகிய இந்திமொழியின் பல்வேறு பிரிவுகளுள் ஒரு பிரிவை இந்திய ஆட்சி மொழியாக முறைகேடாம் நிலையில் தேர்ந்தெடுத்த இந்தியத்தின் மொழி வன்கண்மை எந்நாட்டிலும் நிகழாத ஒன்று. ஒரு தந்தை, அவன் மக்கள், அவன் பேரன் எனப்பலர் இருக்க, அடாவடித் தனமிக்க கொள்ளுப்பேரன் ஒருவன் அப்பரம்பரைச் சொத்தையே வல்லூட்டியாகக் கவர்ந்து கொண்ட வலக்காரமானது இது. இன்றில்லையேனும் என்றேனும் இச்சிறு தன்மையே இந்தியத்தைத் துண்டு துண்டாக்குதல் ஒருதலை.

இனித் தேவமொழியென மடவர்களையும், கொத்தடிமையரையும் ஏமாற்றித் தெய்வத் தமிழைத் திருக்கோயிலுள் புகாமலும், குடும்பச் சடங்குகளில் ஒட்டாமலும், வெட்டியழித்து வரும் ஆரிய நஞ்சு! ஆட்சி, முறைமன்றம், கல்வி முதலியவற்றை வளைத்து வேலைப்பசப்புக் காட்டி ஏமாற்றும் ஆங்கிலக் கொள்ளையாளர்! கருநடம் தெலுங்கு என்னும் பெயரால் தமிழிசையைத் தள்ளியும் கிள்ளியும் எறியும் இழிமை! இருந்த தமிழையும் இல்லா தொழிக்கவே வரிந்து கட்டியும் வாரிக்கட்டியும் நிற்கும் கல்வித்துறையும் தமிழ் நாட்டு ஆட்சியரும்! இத்தனை நெருக்கும் நார்நாராகக் கிழிப்பும் நிகழக் குற்றுயிரும் குலையுயிருமாகித் தத்தளிக்கும் தமிழை அறவே சிதைக்கவும் ஒழிக்கவும் குறி வைக்கும் சின்னதிரை முதலாம்

ஊடகங்கள்! இவ்வளவு கேடுகள் உள்ளன! நம் கோயில் கோபுரம் அணைக்கட்டு ஆகியவை பொறியியல் பட்டம் தாங்கியவர் கட்டியனவா?

பழங்கணியர்கள் என்பார் அறிவியல் கல்லூரியில் பயின்றவரா?

தேவாரம் முதலாம் இறைமை இசை இற்றை நேற்றையவா?

சித்த அல்லது அறிவ மருத்துவம் அயலார் தந்ததா?

தமிழைக் கெடுத்த பாவிகள் தமிழர் தவிர எவர்?

பிறர்மேல் குறையைப் போடுவார் தம்குறை கண்டு என்றேனும் சீர்செய்வரா?

தம்பி, எந்த மொழி மேலும், வெறுப்பு இல்லை! என் தாயை வீட்டை விட்டு வெருட்டிப் பிச்சைக் காரியாக்கி அவள் குடியிருந்த - கட்டிய - பெற்றுப் பெருகிய வீட்டை - வழியே போகிறவளுக்கு வழங்கிய பேதைமையைச் சுட்டாமல் முடியுமா? தமிழைப்படி; பின் எந்த மொழியையும் படி; அந்த மொழி இந்தமொழி என்று சொந்த மொழியைத் தள்ளுகடை ஆக்காதே என்பதே எங்கள் மொழிக் கொள்கை!

தாத்தா, இந்தத் தெளிவு, எழுச்சி இளையவர்க்கும் அவர்களைப் பெற்றவர்க்கும் ஏற்பட்டுவிட்டால் எத்தடையும் தூள்! தூள்! தம்பி, உன்னைப் போன்றவர் கருதிக் கடமை புரிய வேண்டிய களப்பணி அது.

**தாத்தா, மறுத்துக் கேட்பதாக நினைக்க மாட்டீர்கள். என் தெளிவுக்காகக் கேட்கிறேன். அவரவர் கெடுத்தார் என்று கூறி, முடிவில் தமிழரே பாவிகள் என்றீர்கள்!**

ஆம்! கெடுப்பவர் கெடுத்தால் கெட இடம் தந்தவர் யார்? தொடர்ந்து இடம் தருபவர் யார்? துணை நிற்பவர் யார்? அயலார் செய்யாத அடாவடித் தனத்தையும் உடனாகிச் செய்து கொண்டிருப்பவர் யார்? என் தொடையில் ஒருவன் கயிறு உருட்டினால் நான் தொடையைத் தந்தது என் குற்றம் இல்லையா?

**மாறாக, அவர்கள் கரவையும் சூழ்ச்சியையும் அறிந்து அவர்கள் மொழி இனப்பற்றினைப் புரிந்து, நாம் செயலாற்றி இருந்தால் இந்தச் சிறுமைகளும் சீர்கேடுகளும் எய்தியிருக்குமா?**

பக்கத்துவீட்டார் மாடி கட்டினால் புதுப்பொருள் வாங்கினால் அதைப்போல வாங்கும் வரை ஏங்கிக் கண்ணடைக்காமல் பாடுபடும்

நான், ஏன் அவர்கள் மொழி இன நலப்பற்றைக் கண்டும் கற்றுக் கொள்ளாமல் கூடிச் சேர்ந்து கூத்தடித்தல் தானே இப்போது மீட்டெடுக்கவும் பெருந்தடையாக உள்ளது. அதை எண்ணினால் புரியும்!

**சரிதான் தாத்தா! வெளிநாட்டுத் தமிழர்கள் ஆங்குள்ள மொழி இனப்பற்றுமை அறிந்து தாமும் பற்றுமை கொள்ளல் மகிழ்வாக இருக்கிறது. பாராட்டும் படியாகவும் இருக்கிறது.**

உண்மைதான்! ஆனால், அவர்கள் பற்றை அந்நாட்டளவில் நிறுத்தாமல் இங்கே வந்து விழிப்பு ஏற்படுத்தினால் தானே பயன்! அதனை அரிதாகச் சிலரே செய்வதால் விடிவு எளிதில் ஏற்படாதே. முன்னேறியவனையும் முன்னேற்றத்தையும் பகையாகப் பாராமல், படிப்பினையாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் நமக்கு வந்துவிட்டால் விடியா விடிவும் விடிந்தே தீரும்.

ஆமாம் தாத்தா! ஆமாம் தாத்தா! வள்ளுவரும்,

**"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து**

**மாணாத செய்வான் பகை"**

என்றார் அல்லவா!

சரியான மேற்கோள்! எக்காலத்தும் போற்ற வேண்டிய பொருளுரை. எனக்கு உண்டாகும் பகை என்னை வலிமைப்படுத்தும். விழிப்பாக இருக்கவும் செய்யும்; செம்மைப்படுத்தவும் செய்யும் என்பதை உணர்ந்தால் போதும். பழி, பகை விடுத்துப் பணியாற்றிப் பளிச்சிடுவோம்.

**தாத்தா எல்லோரும் இங்குப் பொறுப்புணர்ந்து செயல்படுவதால், ஊர்களிலும், நகரங்களிலும் வீசும் நாற்றக் காற்று, இரைச்சல், பரபரப்பு, கூச்சல், குழப்பம் இல்லாத அமைதி தவழ்கிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வு இன்பம் தூய்மை நிறைவு என்பவை துலங்குகின்றன.**

நல்லது! நீயும் உன்னால் இயன்றதைச் செய்! எல்லாரும் இன்புற்றிருக்க நாம் செய்யமுடியாவிடினும், நம்மைச் சார்ந்தவர்களாவது இன்புற்றிருக்க நம்மால் இயன்றதைச் செய்து கொண்டே இருப்போம். விடிவு வந்தாகும் என்ற நம்பிக்கையோடு பாடுபடுவோம்.

நல்லது தாத்தா! வணக்கம்! பாட்டியைப் போல ஊருக்கு ஒருவரும் உங்களைப் போலத் தொழிலுக்கு ஒருவரும் தோன்றினால் நம் கனவுகள் நனவுகளாக விளங்குவது உறுதியாம்!

அக்கறையும் ஆர்வமும் தொண்டுள்ளமும் கொண்டுள்ள இளைஞர்களுக்கு வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம்! வழிகாட்டும் பெருமக்களுக்கு வணக்கம் செய்கிறோம்!

ஒன்றைச் சொல்கிறேன் கேள்:

போர்க்களம் எதிர்பாரா இழப்பு நல்ல பாடங்களைச் சிலர்க்குக் கற்பித்துள்ளது.

ஏர்க்களம் மக்கள் நலவாழ்வையும் நல்வாழ்வையும் காத்து வருகிறது.

இக்கால இளைஞர்கள் செய்ய வேண்டியது களப்பணி! வழிகாட்ட வேண்டியது, முதியவர்கள் - நாட்டுநலம் கருதுபவர்கள் - கடப்பாடு.

கடைசியாக உனக்கு ஒன்றைச் சொல்கிறேன்! இது தொழிற்சாலை, பண்ணை என்ற அளவில் எண்ணாதே. இந்நாள் நடைப்படி இது ஒரு குட்டிப் பல்கலைக்கழகம். அதுவும் கட்டணம் எதுவும் பெறாத தேர்வு நடத்தாத பல்கலைக்கழகம்.

**என்ன தாத்தா! புதிராக இருக்கிறது.**

வெளியில் இருந்து வந்து இயற்கை வேளாண்மை, உரமூட்டல் முதலியவற்றை இங்கே வந்து கற்றுக் கொள்ளலாம்.

கொல்லு தச்சுப் பட்டடை, நெசவுச் சாலை, முடிதிருத்தகம், சமையல் கலை என்பவற்றைக் கற்க விரும்புவார் கற்றுக் கொள்ளலாம். அவர்கள் கற்றுக் கொண்டவற்றைக் கொண்டு வெளியூர்களில் போய் தொழில் நடத்திக் கொள்ளலாம். கற்பிப்பது மட்டும் எங்கள் கடமை. மற்றைய தொழில் தேடிக் கொள்வதும் தொடங்குவதும் அவர்கள் விருப்பப்படி செய்யலாம். ஆசிரியப் பயிற்சி மருத்துவப்பயிற்சி இங்கே தருவது இல்லை. ஏனெனில் அதற்குச் சான்றிதழ் கொண்டே வேலை செய்யமுடியும்! இலவயமாக முதியோர் கல்வி கற்பிப்பதற்கு வேண்டுமானால் இங்கே பயிற்சி தரப்படுகிறது. அதற்கு அரசு உதவியையோ இசைவையோ பெற வேண்டியதில்லை. ஆதலால்

எண்ணியும் பாராத பழங்குருகுலக் கல்வியை மீட்டெடுத்துள்ளீர்கள் தாத்தா! வணக்கம்.

நிறைவுரை

நல்லதம்பி, செவ்வையும் ஒப்புரவும் அமைந்த நல்லரசு ஒன்று உண்டானால் இத்தனி முயற்சி தேவையில்லை! ஆற்றுநீர் அற்றுப் போகும் போது தானே ஊற்றுநீர் தேட வேண்டியதாகின்றது. விழிப்புறுத்தும் செயலேயன்றி, விடிவான செயலி.்.து ஆகாது என்பதை உணர்ந்துதான் நாங்கள் இருக்கிறோம்! தொற்றுநோய் மிக்கபோதில் விழிப்புணர்வோடு ஊண், உடை, குடிநீர், வெளிச் செலவு என்பவற்றில் காட்டும் அக்கறை போல்வது தான் இது! சாதி சமய அரசியல் கட்சி உலகமயம் கலப்படம் கொள்ளையடிப்பு கையூட்டு, அறிவு பண்பாட்டு அழிப்பு, உழைப்பைக் கெடுத்தல், அறக்கேடு அறமாக ஆக்கப்படல் செல்வரைச் செல்வராக்கல், என்பவற்றைக் **கோடிட்டுக் காட்டவாவது எங்கள் 'வள்ளலார் ஒப்புரவுத் தொழிற்பண்ணை' உதவும்** என்னும் நம்பிக்கையில் செயல்படுகிறோம்.

'ஊருக்கொருவர்' என்பது **முற்பகுதி** என்றால்,

'தொழிலுக்கு ஒருவர்' என்பது **பிற்பகுதியாகும்.**

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

*****



(இடமிருந்து) திருவாட்டி இலட்சுமி

கு. தாமோதரன்

திருவாட்டி பா. உஷா

The Printing House, Try-23. Ph : 2420121